வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

05.01.2021 செவ்வாய்க்கிழமை






# ஐ.நாவின் புதிய தீர்மானம் குறித்து ஜெய்சங்கருடன் கூட்டமைப்பு பேசும்

## தலைவர் சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 05

"இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் புதிய தீர்மானம், ஜெனிவா விவகாரத்தில் தற்போதைய அரசின் அசமந்தப்போக்கு மற்றும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் உள்ளிட்ட சமகால அரசியல் நிலவரங்கள் குறித்து கொழும்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய பேச்சு நடத்தவுள்ளது."

02



## கொரோனாவால் உயிரிழப்பு 215!

கொழும்பு,ஜன.05

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் இருவர் உயிரிழந்தனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 215 ஆக அதிகரித்துள்ளது.

இறுதியாக பதிவான இரு மரணங்களும் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த ஆண்கள் என்றும் அவர்கள் 71 மற்றும் 86 வயதுடையவர்கள் என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 45 ஆயிரத்தை கடந்துள்ளது. எனினும் 37 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் குணமடைந்துள்ளனர். (அ-எ)



## இலங்கை வந்துள்ள இங்கிலாந்து வீரருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஜன. 05

இலங்கை வந்த இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் மொயீன் அலி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் இருந்து புறப்படுவதற்கு முன்னர் அவருக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் தொற்று இல்லை என்று உறுதி

02

## மருதனார்மடம் கொத்தணியில் மேலும் 6 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஜன.05

மருதனார்மடம் கொரோனா வைரஸ் பரவல் கொத்தணியில் மேலும் 6 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 240 பேருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன்

02

## தொற்றாளர் எண்ணிக்கை 45 ஆயிரத்தை தாண்டியது

கொழும்பு,ஜன.05

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 45 ஆயிரத்தைக் கடந்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று மேலும் 277 பேருக்கு தொற்று உறுதியானதையடுத்து தொற்றாளர்கள் எண்ணிக்கை 45 ஆயிரத்து 241 ஆக உயர்ந்துள்ளது.

தற்போது தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் 6 ஆயி ரத்து 934

02

## நாட்டின் பாடசாலைகள் 25ஆம் திகதி மீள ஆரம்பம்

கொழும்பு, ஜன. 05

11ஆம் தர மாணவர்களுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ளது. இதனாலேயே அந்த வகுப்பு மாணவர்களுக்கு

பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்று அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

எனினும், மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளின் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படாது என்றும் நேற்று கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர்

02

## சுவை, மணம் நுகரும் திறனை முற்றாக அழிக்கிறது கொரோனா

### அதிர்ச்சி தகவல் வெளியானது

நியூயோர்க், ஜன. 05

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட பலரும் அதிலிருந்து குணமடைந்த பின்னரும் மணம், சுவை உணர்வுகள் அற்றிருக்கின்றனர் என்று விஞ்ஞானிகள் அவதானித்துள்ளனர். இந்த உணர்வுகள் மீளத் திரும்புமா? அப்படியானால் எப்போது திரும்பும் என்று மருத்துவர்களால் கூறமுடியாது

02

## தொற்றால் இறப்பவர்களை அடக்கம் செய்யலாம்

### நிபுணர் குழு பரிந்துரை

கொழும்பு, ஜன. 05

கொரோனா தொற்றால் இறந்தவர்களின் சடலங்களை அகற்றுவது தொடர்பான வழிகாட்டலை நுண்ணுயிர் மற்றும் வைரலொஜிஸ்ட்கள் அடங்கிய சிறப்பு நிபுணர் குழு 15 பரிந்துரைகளை சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ளது.

இதன்படி, இறந்தவர்கள், அவர்களின் குடும்பங்களின் விருப்பின்படி உடலை அகற்றும் செயல்முறை முடிந்தவரை மதிக்கப்பட வேண்டும். நியமிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் மட்டுமே உடலங்களை கையாள வேண்டும். உடலை தகனம் செய்யவோ

02

## கொரோனா 2 ஆவது அலையால் பெண்களுக்கு பல நெருக்கடிகள்

### தலதா அத்துக்கோரள கவலை

கொழும்பு,ஜன.05

கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாம் அலையில் ஆடைத் தொழில்சாலையில் பணிபுரியும் பெண்களும், நாட்டுக்குப் பாரியளவில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள பணிப்பெண்களும் தற்போது பெரும்

02

## நீதிமன்ற நடவடிக்கைகள் மீண்டும் முறையாக கொண்டு செல்லப்படும்

### நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு,ஜன.05

தடைப்பட்டிருந்த நீதிமன்ற நடவடிக்கைகளை மீண்டும் முறையாக மேற்கொண்டு செல்ல அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்படும் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

கொரோனா இரண்டாம் அலையால் தடைப்பட்டிருந்த நீதிமன்ற நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில் கொழும்பு நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகள் மற்றும் ஊழியர்களுக்கு கொரோனா பாதுகாப்பு தொகுதிகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:

கொரோனா இரண்டாம் அலையால் கடந்த

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## சுவை...

உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டு சுவை, மண உணர்வுகள் முற்றாக இழக்கப்படுவது குறித்து நியூயோர்க் ரைம்ஸ் ஓர் ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதிலேயே இந்த விடயம் குறித்துத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், சுவை, மணம் உணர்வுகள் இழப்பால் பாதிக்கப்பட்டவர்கள் உளரீதியாகவும் பாதிக்கப்படலாம் என்றும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பாதிக்கும் போது முதல் அறிகுறியாக மணம் குறைந்து வரும். சிலருக்கு மண உணர்வுடன் சுவை உணர்வும் பாதிக்கப்படுகின்றது.

ஆனால், தொற்றிலிருந்து மீண்டவர்களில் சிலர் மணம், ருசி உணர்வை முற்றாகவே இழந்துள்ளமை தெரியவந்துள்ளது. இது நிரந்தரமாகவே இருந்துவிடவும் கூடும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தொற்றாளர்...

பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 436 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றினால் இதுவரை 215 பேர் உயிரிழந்தனர். (அ-எ)

## ஐ.நா.வின்...

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மூன்று நாள் உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு இன்று இலங்கை வருகின்றார். இதன்போது அவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்த வுள்ளார்.

தம்மை ஜெய்சங்கர் சந்திக்கவுள்ளமையை உறுதிப்படுத்திய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்படி விடயத்தையும் தெரிவித்தார்.

இலங்கையில் சீனத் தலையீடுகள் அதிகரித்து வரும் நிலையில் அண்மையில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இந்தநிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் திடீர் பயணம் மேற்கொண்டு இன்று இலங்கை வருகின்றார்.

மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கை மீது புதிய பிரேரணை கொண்டுவரப்படவுள்ள நிலையிலும், மாகாண சபை முறைமைக்கு எதிராக ராஜபக்ஷ அரசிலுள்ள அமைச்சர்கள் சிலரும், கடும்போக்குவாத பௌத்த தேரர்களும் போர்க்கொடி தூக்கியுள்ள நிலையிலும் ஜெய்சங்கரின் இலங்கைக்கான பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கைக்கான வருகையை இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று மாலை உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் 'ருவிட்டர்' பதிவில், "வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அழைப்பின் பேரில் நாளை (இன்று) விஜயம் மேற்கொள்ளும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், எதிர்வரும் 07ஆம் திகதி வரை இலங்கையில் பல்வேறுமட்டப் பேச்சுகளிலும் ஈடுபடவுள்ளார்" - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 05ஆம் பக்கத்தில்)

## நாட்டின்...

சந்திப்பில் அமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே, எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பாடசாலை கள் அறிவித்தபடி ஆரம்ப மாகும். எனினும் தரம் ஒன்றிற்கு மாண வர்களை சேர்க்கும் நடவடிக்கை பெப்ர வரி மாதமே இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்று பாலர் பாடசாலைகளும் விரைவில் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கை...

செய்யப்பட்டது. இந்நிலையில் இலங்கை வந்த பின்னர் அவருக்கு நேற்று நடத்தப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதியானது. இதையடுத்து அவருடன் நெருங்கிப் பழகிய இங்கிலாந்து வீரரான கிறிஸ் வோக்ஸ் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறார்.

இலங்கை - இங்கிலாந்து அணிகள் எதிர்வரும் 14ஆம் திகதி டெஸ்ட் போட்டியில் மோதவுள்ளன. இதனால் இங்கிலாந்து அணிகள் பயிற்சியை தொடங்க வசதியாக இன்று செவ்வாய்க்கிழமை மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

## கொரோனா...

நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இவர்கள் தொடர்பில் அர சாங்கம் முழுக் கவனம் செலுத்த வேண்டும் என்று ஐக்கிய மக் கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக் கோரள தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட் டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாம் மகளிர் தொடர்பான யோசனைகளை முன்வைத்த போது அதற்கு எதிராக கூச்சலிடப்பட்டது.

ஆனால், இன்று பெண்களின் பிரச்னை தொடர்பில் அமைச்சரவையில் பேசுவதற்குக் கூட ஓர் அமைச்சர் நியமிக்கப்படவில்லை. ஆடைத் தொழில்சாலை மூலம் நாட்டுக்கு கூடுதல் வருமானத்தைப் பெற்றுக்கொடுப்பது பெண்களாவர்.

கொரோனா தொற்று பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஏற்படுத்திக் கொடுக்கும் பெண்களை அழைத்து வருவதற்குக் கூட அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

ஆடைத் தொழில்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் இரண்டாம் அலையின் பின்னர் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

பெருந்தோட்டப் பகுதிகளிலும் இந்தப் பிரச்னை ஏற்பட்டுள்ளது. ஆனால் அவை வெளிப்படுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில் பெண்களின் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் எமது ஜனாதிபதி வேட்பாளர் கருத்து தெரிவித்தபோது அதனைப் பற்றிப் பேச ஆண்களுக்கு உரிமையில்லை என்று கூறினார்கள்.

40 ஆயிரம் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டாலும் 30 ஆயிரம் பேர் குணமடைந்துவிட்டனர் என்று பெருமை பேசிக் கொள்கிறார்கள். ஆனால் 40 ஆயிரம் பேருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்று யாரும் கூறுவதில்லை.

பெண்களுக்கான அமைச்சொன்றைக் கூட வழங்க முடியாத இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் பொறுப்புள்ள எதிர்க் கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் குரல் கொடுக்கும்- என்றார். (அ-எ)

# மணல் கடத்தல் முறியடிப்பு

வடமராட்சி, ஜன. 05

வடமராட்சியில் மணல் கடத்தல் ஒன்றை முறியடித்த விசேட அதிரடிப் படை ஹன்ரர் வாகனம் ஒன்றை கைப்பற்றியது.

மணல் கடத்தல் தொடர்பில் விசேட அதிரடிப் படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு அவர்கள் விரைந்த போது மணல் ஏற்றிய ஹன்ரர் ஒன்றை கண்டு அதை நிறுத்த உத்தரவிட்டனர்.

ஆனால், அது வேகம் எடுக்கவே, அதிரடிப்படையும் அவர்களை துரத்திச் சென்றது. சுமார் 5 கி.மீற்றர் கலைத்து சென்ற பின்னர் ஹன்ரர் மடக்கப்பட்டது. ஆனால், கடத்தலில் ஈடுபட்டவர்கள் தப்பிச் சென்றிருந்தனர்.

கைப்பற்றிய ஹன்ரர் வாகனம் பருத்தித்துறை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

## தொற்றால்....

அல்லது அடக்கம் செய்யவோ உறவினர்களிடம் ஒப்படைக்கக்கூடாது.

உடலத்துடன் தொடர்புபடுவர்கள் அனைவரும் கொரோனா தடுப்பு விதிகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும். அவர்களுக்கான கிருமிநீக்கி சாதனங்கள் அனைத்தும் கிடைக்க வேண்டும். தகனம் அல்லது அடக்கம் செய்வதற்கு முன் உடலை பதப்படுத்தக்கூடாது. உடலை அகற்றுமாறு உத்தரவு வழங்கப்பட்ட 24 மணி நேரத்துக்குள் தகனம் செய்யவோ அல்லது அடக்கம் செய்யப்படவோ வேண்டும்.

சவப்பெட்டியில் உடலை வைக்கும் முன்னர், அது 300um தடிமனான சவப் பையால் பாதுகாக்கப்பட வேண்டும்.

குடும்பத்தினர் உடலை காண விரும்பினால், சவப்பையை திறந்து காட்ட அனுமதிக்கப்படும். ஆனால், அவர்கள் ஒரு மீற்றர் தூரத்தில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மட்டுமே பார்வையிட முடியும். அவர்கள் உடலையோ அல்லது அது சம்பந்தப்பட்ட உடைமையையோ தொட அனுமதிக்கப்படாது.

குடும்பத்தவர்களில் நால்வர் மட்டுமே உடலைக் காண அனுமதிக்கப்படுவர். ஒரே நேரத்தில் இருவர் பார்வையிட அனுமதி உண்டு. அதிகபட்சமாக அவர் களுக்கு 5 நிமிடங்கள் - மொத்தமாக 10 நிமிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

தகனம் அல்லது அடக்கம் செய்யும் இடத்தில் எந்தக் காரணத்திற்காகவும் சவப்பெட்டி திறக்கப்படாது. எந்த மத சடங்குக்காகவும் 10 நிமிடங்கள் அனுமதிக்கப்படும். அதேநேரம் ஒரு மத பிரமுகரும் குடும்பத்தின் 4 உறுப்பினர் களும் உரிய இடத்திற்கு அருகில் - ஒரு மீற்றர் தூரத்தில் அனுமதிக்கப்படலாம்.

அடக்கம் செய்யப்படும் புதைகுழி, வயல், கால்வாய் பகுதிகளில் இருந்து குறைந்தது 10 மீற்றர் தூரத்தில் இருக்க வேண்டும். கிணறு, குழாய் கிணறு போன்றவற்றிலிருந்து 250 மீற்றர் தூரத்தில் இருக்க வேண்டும். நீரூற்று குறைந்தது 30 மீற்றர் ஆழத்தில் இருக்க வேண்டும். இதே சமயம் நில மேல் மட்டத்தில் இருந்து 1.5 மீற்றர் ஆழம் 1.2 மீற்றர் அகலத்தில் குழி எடுக்கப்பட வேண்டும் என்றும் அந்தப் பரிந்துரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## மருதனார்மடம்...

தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த மூன்று பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும் இவ்வாறு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவர்கள் 5 பேரும் 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பருத்தித்துறை புலோலியைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலை 7ஆம் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த போதே அவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் கடந்த மூன்று நாள்களுக்கு முன் மருதனார்மடத்திலுள்ள மோட்டார் சைக்கிள் திருத்தகத்துக்கு சென்றிருந்தார் எனவும் அங்கு தண்ணீர் குடித்தார் என்று சுகாதாரத் துறையினருக்குத் தெரிவித்தார்.

பின்னர் காய்ச்சல் காரணமாக மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு நேற்று முன் தினம் முன்னெடுத்த பி.சி.ஆர். பரிசோதனையில் மாதிரிகளை மீளப்பெறுமாறு அறிக்கையிடப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவரது குடும்ப உறுப்பினர்களைச் சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை சுகாதாரத்துறையினர் முன்னெடுத்துள்ளனர். (அ-எ)

## நீதிமன்ற...

இரண்டு மாதங்களுக்கும் அதிக காலம் நீதிமன்ற நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள முடியாமல் போயிருந்தது.

அதனால் மீண்டும் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றோம். அதற்கு நீதிமன்ற சேவையில் இருக்கும் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு கொரோனா சுகாதார பாதுகாப்பு தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பல குறைபாடுகள் இருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. குறிப்பாக கட்டடங்களுக்குத் தேவையான மீள் செப்பனிடும் நடவடிக்கை, காரியாலய காப்பக வசதிகள் மற்றும் மலசலகூடங்கள் உட்பட ஏனைய அடிப்படை வசதிகளை விரைவில் பூர்த்தி செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன் - என்றார். (அ-எ)

## குருமண்காடு...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசியல் தரப்பு தனது நிலைப்பாட்டை முன்வைக்க இருக்கின்ற அதே சமயம், இலங்கை அரசு ஜெனிவா பிரேரணையிலிருந்து விலகிச் செல்லப்போவதாகக்கூறி, தான் மேற்கொண்ட யுத்த கால தவறுகளிலிருந்து தப்பித்துச்செல்ல முயல்வதை காத்திரமாக தடுப்பதற்குரிய ஒரு பொறிமுறை யையும் தமிழ் அரசியல் தரப்பு தயாரிக்க வேண்டியது மிக அவசியமானதாகின்றது. இதுவிடயத்தில் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் புலம்பெயர்ந்த தமிழ் அரசியல் அமைப்புக்களின் ஒத்துழைப்பையும் இலங்கையிலுள்ள முற்போக்கு சக்திகளின் ஒத்தாசைகளையும் பெறவேண்டிய ஒரு நிலை காணப்படுகின்றது.

எனவே, ஒரு காட்டில் வளருகின்ற மெலிதான அடம்பன் கொடி எவ்வாறு ஒன்று திரண்டு பலமிக்கதாக மாறிவிடுகிறதோ அதேபோல, வன்னி மண்ணின் குருமண்காட்டில் ஏற்பட்ட தமிழ் அரசியல் தரப்பினரின் ஐக்கியமான நிலைப்பாடுகூட மேலும் ஆக்க பூர்வமான முறையில் பலமடைய வேண்டியதே காலத்தின் தேவையாகின்றது.

ஈழநாடு
Eelanadu
05.01.2021 செவ்வாய்க்கிழமை
சார்வாரி, மார்கழி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அரசாங்கம் வாக்குறுதிகளை மீறினால்?

"இலங்கை அரசாங்கம் வெவ்வேறு ஜனாதிபதிகளின் கீழ், சர்வதேசத்திற்கும் இந்தியாவிற்கும் வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றது. அவற்றிலிருந்து அரசாங்கம் விலகமுடியாது. அவ்வாறு விலகினால், அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் நாம் முடிவெடுப்போம்" – இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான, எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். ஆனால், ராஜபக்ஷக்களின் அரசாங்கம் ஏற்கனவே தங்களின் நிலைப்பாட்டை தெளிவாகவே அறிவித்திருக்கின்றது. அதாவது, முன்னைய அரசாங்கம் இணையனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்டிருந்த, 30-1 தீர்மானத்தை முற்றிலுமாக நிராகரித்திருக்கின்றது. இந்த நிலையில், அரசாங்கம் வாக்குறுதிகளிலிருந்து விலகமுடியாதென்று வாதிடுவதில் என்ன பொருள் இருக்க முடியும்?

இலங்கையின் அரசாங்கங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வாக்குறுதிகளை வழங்கியிருப்பது எந்தளவிற்கு உண்மையோ, அதேயளவிற்கு அந்த வாக்குறுதிகளை தொடர்ந்தும் உதாசீனம் செய்துவருவதும் உண்மையாகும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின்போது, மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் சில வாக்குறுகளை வழங்கியிருந்தார். அதாவது, இலங்கையில் புரையோடிப் போயுள்ள அரசியல் பிரச்னைக்கு நிரந்தர தீர்வைக் காணவேண்டுமாயின், முதலில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டும். விடுதலைப் புலிகள் அரங்கில் இருந்தால் ஒரு நிரந்தர தீர்வை காணமுடியாது. எனவே, முதலில் உலகம் எங்களுடைய பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். யுத்தம் முடிவுற்றதும் நாங்கள் இந்தப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வொன்றை காண்போம். 13ஆவது திருத்தச் சட்டத்திற்கும் அப்பால் சென்று, நாம் பிரச்னையை தீர்ப்போமென்றும் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். ஆனால், போரில் வெற்றிபெற்றதும், மகிந்த ராஜபக்ஷ தனது வாக்குறுதிகளையும் தூக்கி வீசிவிட்டார். அதேவேளை, பொறுப்பு கூறல் விடயத்திலும் சர்வதேச சமூகத்துடன் ஒத்துப்போக மறுத்தார். மேற்குலகின் அழுத்தங்களை சமாளிப்பதற்காக சீனாவிடம் சரணடைந்தார். அதே போன்று, ரணில் – மைத்திரி அரசாங்கமும் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவில்லை.

இந்த பின்புலத்தில் நோக்கினால், இலங்கையின் ஆட்சியாளர்கள் பொதுவாகவே வாக்குறுதிகளை உதாசீனம் செய்வதில் வல்லவர்களாகவே இருந்து வருகின்றனர். இப்போதும் வாக்குறுதிகளை புறம்தள்ளியே ராஜபக்ஷக்கள் செயல்பட துணிகின்றனர். வரும் எவ்வாறான அழுத்தங்களையும் தங்களால் சமாளிக்க முடியுமென்னும் ஒரு முகத்தையே சிங்கள மக்களுக்கு காண்பிக்க முற்படுகின்றனர். சிங்கள – பௌத்தவாத தரப்புக்களை தங்களின் பக்கமாக வைத்துக்கொள்வதன் ஊடாக தங்களின் ஆட்சியை தக்கவைக்க முடியுமென்று நம்புகின்றனர். அதே வேளை, வெளியாரின் அழுத்தங்களை சமாளிக்க சீன துருப்புச் சீட்டை பயன்படுத்தலாமென்பதில் துணிவும் நம்பிக்கையும் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில், தமிழர்களின் சார்பில் எந்த நாடு கொழும்பின்மீது அழுத்தங்களை பிரயோகிக்க முயலும்? ஆட்சி மாற்றமொன்றின் மூலம் தான் தமிழர்களுக்கு ஒரு ஜனநாயக வெளி கிடைத்தது. ஆனால், அதனையும் கூட்டமைப்பு சரியாக பயன்படுத்தவில்லை.

ஆட்சியாளர்களை ஏதேவொருவகையில் அரவணைப்பில் வைத்துக் கொள்ளவேண்டுமென்னும் இன்றைய சர்வதேச ஒழுங்கின் கீழ், இலங்கை இதுவரை வெற்றிகரமாக தன்னை தற்காத்துக் கொண்டிருக்கின்றது. இதனை தமிழர் தரப்பு எவ்வாறு கேள்விக்குள்ளாக்கப் போகின்றது? எவ்வாறு உலகத்தை தங்கள் பக்கம் திரும்பப் போகின்றது? தங்களுக்குள் முட்டிமோதிக்கொள்வதிலும், தரகு அரசியல் செய்வதிலும் காலத்தை விரயம் செய்யும் தமிழ் தலைமைகளால் இது முடியுமா?

# குருமண்காடு ஐக்கியம்!

- அலசுவது **இராஜதந்திரி** -

இலங்கை தமிழ் அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தை மாவீரன் பண்டார வன்னியன் அரசாண்ட வன்னிப் பிரதேசம் ஏற்படுத்தியுள்ளது. நேற்று முன்தினம் வவுனியாவின் குருமண்காடு விருந்தினர் விடுதியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் தேசிய கூட்டணி ஆகியவை ஒன்றிணைந்து, எதிர்வரும் ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன் றில் நிறுத்தி, இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற யுத்தக் குற்றங் கள் தொடர்பாக விசாரணை செய்யக் கோரும் கோரிக்கையை முன்வைக்க முடிவு செய்துள்ளன.



தம்மிடையே நிலவுகின்ற அரசியல் ரீதியான போட்டித்தன்மையை புறந்தள்ளி, ஓர் ஒத்திசைவான போக்கைக் கொண்டிருக்க தமிழ் அரசியல் கட்சிகள் முன்வந்திருப்பது, குறுகிய மனப்பாங்கிலான அரசியல் நடவடிக்கைகளை ஓரங்கட்டுவதாகவும் அமைந்திருக்கின்றது. இத்தகைய ஒத்திசைவான போக்கு காலங்கடந்த தொன்றான போதிலும் தமிழ் அரசியலைப் பொறுத்தவரை தற்போதைய உள்ளூர் மற்றும் சர்வதேச அரசியல் நிலவரங்களைக் கையாளுவது தொடர்பில் காலமறிந்த ஒரு நடவடிக்கையாகவே காணப்படுகின்றது.

**ஒத்திசைவான அரசியல்**

எழுபதுகளில் தமிழர் விடுதலை கூட்டணியாகவும், பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பாகவும் வடிவமெடுத்த தமிழ் அரசியல் கட்சிகளின் ஒத்திசைவான அரசியல் நடவடிக்கைகள் தற்போது தமிழ் அரசியலின் சர்வதேச முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, வன்னி மண்ணின் குருமண் காட்டில் இடம்பெற்ற சந்திப்பபையடுத்து ஒற்றுமையாக இயங்கவேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்ததாக விளங்குகின்றது.

இலங்கை அரசைப் பொறுத்தவரை இத்தடவை ஜெனிவாவில் இடம்பெறவுள்ள 46ஆவது மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகிச்செல்வதாக அறிவித்திருப்பதோடு, இலங்கையில் எவ்விதத்திலும் யுத்த குற்றங்கள் இடம்பெறவில்லை என்று நிரூபிக்கப்போவதாகவும் கங்கணம் கட்டி நிற்பதையுமே அவதானிக்க முடிகின்றது. ஆகவே, இலங்கை அரசின் 'முழுப்பூசனியை சோற்றில் புதைக்கும்' இந் நடவடிக்கைக்கு இடமளிக்காது, ஒன்றிணைந்து தமிழ் அரசியல் தரப்பு முழுப் பலத்துடன் செயல்படவேண்டியதே இன்றியமையாததாகின்றது.

2016ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கை தொடர்பான ஜெனிவா பிரேரணை இலங்கை அரசின்மீது அழுத்தங்களை பிரயோகித்து, யுத்தத்துக்குக்குப் பின்னரான மனிதாபிமான பிரச்னைகளுக்கு தீர்வு காணக்கூடிய அம்சங்களைக் கொண்டிருந்தது.

**கையாலாகாத்தனம்**

ஆயினும், தமிழ் தேசியக் கூட்டமைப்பே அன்று தனித்து நின்று இப்பிரேரணையை கையாண்ட நிலையில், தவறான அணுகு முறைகளோடு பின்னடைவுகளையும் சந்திக்க வேண்டியிருந்தது.

இதன்காரணமாக நல்லாட்சி எனக் கூறிக் கொண்டு வடக்கு - கிழக்கு மக்களின் பேராதரவோடு பதவிக்கு வந்திருந்த முன்னைய அரசு, ஜெனிவா பிரேரணையிலி ருந்து தப்பித்துக்கொள்ளும் வாய்ப்பை அபரிமிதமாகப் பெற்றிருந்தது. இந்நிலையில், தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஜெனிவாவில் தனது தவறான அணுகு முறைகளை உணர்ந்த நிலையில், தமிழ் அரசியல் தரப்பு ஒற்றுமையாக இயங்கவேண்டிய அவசியத்தையும் கருத்தில் கொண்டு குருமண்காட்டில் ஐக்கியமாக செயல்பட முடிவுசெய்திருப்பது பாராட்டுக்குரியதாகவே இருக்கின்றது.

இத்தகைய ஒற்றுமையின் அவசியத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு மாத்திரமல்ல. ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் காலமறிந்து உணர்ந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது. இத்தகையதொரு ஐக்கியப்பட்ட நிலை தமிழ் அரசியல் தரப்பிடம் காணப்படாவிடில் இலங்கை அரச தரப்பினர் தமிழர் பிரச்னை குறித்த விடயங்களை தட்டிக்கழிக்கும் போக்கே வலுவடையும்

**தமிழ் தரப்பின் முன்மொழிவு**

அத்துடன், தமிழ் அரசியல் தரப்பிலுள்ள ஒவ்வொரு கட்சியும் வெவ்வேறாக தனிவழி சென்று அனைவருக்கும் பொதுவான பிரச்னைகளை கையாளும் பட்சத்தில், சர்வதேச ரீதியாகக்கூட நகைப்புக்குள்ளாகும் சூழ்நிலைகளே வலுவடையும்.

ஜெனிவா மனித உரிமை பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இடம்பெறவுள்ள நிலையில் தற்போது கூட்டுச் சேர்ந்துள்ள தமிழ் அரசியல் கட்சிகள் தமது முன்மொழிவுகளை தீர ஆராய்ந்து, எவ்வித இசகு பிசகுகளுக்கும் இடந்தராது ஒத்திசைவாக சமர்ப்பிக்க வேண்டியதே அவசியமானதாகின்றது.

ஜெனிவாவில் இத்தடவை கூட்டாக

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

# உடல் அடக்கமா எரிப்பா என்பது நாட்டின் தேசிய பிரச்னையில்லை

## கூறுகின்றது பொதுஜன பெரமுன



கொழும்பு, ஜன.05

**கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்வதா அல்லது அடக்கம் செய்வதா என்ற விவகாரம் இலங்கையின் தேசிய பிரச்னையில்லை பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

செய்தியாளர்மாநாட்டில்இதனை தெரிவித்துள்ள அவர், இந்த விவகாரம் குறித்து ஆராய்வதற்காக 2020 இல் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு இது குறித்த தீர்மானத்தை எடுக்கும் எனவும் கூறினார்.

கொரோனா வைரஸ் தொடர்பாக முடிவெடுப்பதற்கான அதிகாரம் வேறு எந்த குழுவிற்குமில்லை என தெரிவித்துள்ள அவர், ஏனைய குழுக்களால் ஆராய மாத்திரம் முடியும் எனவும் குறிப்பிட்டார்.

"உடல்கள் தொடர்பான விவகாரம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. சில குழுக்கள் இதனை தேசிய பிரச்னையாக மாற்ற முயல்கின்றன.

பொதுமக்கள் வைரஸினால் பாதிக்கப்படாமலிருப்பதை உறுதி செய்வதற்காகவும் கொரோனா தொடர்பான மரணங்களை தடுப்பதற்காகவும் கொரோனா பாதிப்பின் மத்தியிலும் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காகவும் கொரோனா பரவலை தடுப்பதே தேசிய பிரச்னை" எனவும் அவர் கூறினார்.



## வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் புதிய ஆண்டு கடமை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 05

புதிய ஆண்டில் அலுவலகக் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கு ஏற்றப்பட்டு தேநீர் விருந்து பசாரம் இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம் சாள்ஸ்,வடக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் 5 மாவட்டங்களின் அரச அதிபர்கள், வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், ஐந்து மாவட்டங்களின் படைத் தளபதிகள், வடக்கு மாகாண பொலிஸ்மா அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், வடக்கு மாநகர முதல்வர், இந்தியத் துணைத்தூதரக அதிகாரி எனப் பலரும் கலந்து கொண்டனர்.




## உறவுகளை இழந்தோரின் வேதனை அனுபவப்பட்டால் மட்டுமே புரியும்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 05

உறவுகளை இழந்து நிற்கும் அப்பாவி மக்களின் வேதனை என்னவென்று அனுபவபட்டிருந்தால் மட்டுமே அவர்களுக்கு புரிந்திருக்கும் என வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோருக்கான அமைப்பின் பணிப்பாளர் பி. கருணாவதி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணாமலாக்கப்பட்டமைக்கு காரணமான அரசிடம் இருந்து எமக்கு நீதி கிடைக்காது என்பதை நன்கு உணர்ந்துள்ள நிலையில், நாம் ஐ.நா. மனித உரிமை பேரவை, ஐ.நா பாதுகாப்பு சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் இருந்தே நீதியை எதிர்பார்த்து நிற்கிறோம்.

கடந்த 16.12.2019 அன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள ஜனாதிபதி, காணாமல்ஆக்கப்பட்டோரின் மரண சான்றிதழ்களை வழங்குவதுடன், குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்குவது குறித்து சிந்திக்க முடியும் என்றும் அவர்களை திருப்பி கொண்டுவர முடியாது என்றும் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த கூற்றுக்கு ஜெனீவாவில் நின்று எமக்காக குரல் கொடுக்கிறேன் என்று மக்களை ஏமாற்றும்தமிழ் அரசியல்வாதிகளும் அமைப்புகளும் என்ன பதிலடி கொடுத்தீர்கள்?

எனவே எமது விடயத்தில் எம்மை கலந்தாலோசித்து எடுக்கும் முடிவுகளுக்கு மாத்திரமே நாம் ஆதரவு வழங்குவோம். இது வரை எம்மை ஏமாற்றியவர்களை இனியும் நாம் நம்பபோவதில்லை - என்றார்.

(அ)

## மேலும் 565 பேர் குணமடைவு

கொழும்பு, ஜன. 05

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 37 ஆயிரத்து 817 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் மேலும் 565 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில்இதுவரைகொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 44 ஆயிரத்து 774 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 6 ஆயிரத்து 744 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை, 436 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

## மட்டக்களப்பில் கிளைமோர் மீட்பு

மட்டகளப்பு, ஜன. 04

மட்டக்களப்பு வாழைச்சேனை முல்லை நகர் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட கிளைமோர் ரக வெடிப்பொருள் ஒன்றைப் பொலஸார் நேற்று மீட்டனர்.

இந்த வீதியில் மர்மப் பொருள் ஒன்று கிடப்பதாகப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அந்த இடத்திற்கு சென்ற பொலிஸார் அதனை மீட்டனர்.



## பிரதமரின் நவீனமயப்படுத்தப்பட்ட மக்கள் தொடர்பாடல் பிரிவு திறப்பு

கொழும்பு, ஜன. 05

நவீனமயப்படுத்தப்பட்ட பிரதமரின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு நேற்று முற்பகல், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொள்ளுபிட்டி, ஆர்.ஏ.டி மெல் மாவத்தையில் திறந்து வைக்கப்பட்டது.

மஹாசங்கத்தினரின் பிரித் பாராயணத்தை தொடர்ந்து சமய வழிபாடுகளில் ஈடுபட்ட பிரதமர், மங்கள விளக்கேற்றி பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் பணிகளை சுபநேரத்தில் ஆரம்பித்து வைத்தார்.

கொழும்பு-03, கொள்ளுபிட்டி ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை, இல.101 என்ற இடத்தில் அமைந்துள்ள இப்பிரிவு பொதுமக்களின் வசதிக்காக நவீனமயப்படுத்தப்பட்டு இதற்கு முன்னர் காணப்பட்ட அதே இடத்தில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவு திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையான வார நாட்களில் பொதுமக்களுக்காக திறக்கப்பட்டிருக்கும்.

பொதுமக்களின் கருத்துக்கள், பிரச்னைகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் செயற்திறனான சேவையினூடாக திறம்பட தீர்த்து வைப்பதே பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் நோக்கமாகும்.

கடந்த காலத்தில் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அவ்வாறான யோசனைகள், முறைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகளை உள்ளடக்கிய சுமார் 12,000 கடிதங்களுக்கு பிரிவின் தலையீட்டுடன் பதிலளிக்கப்பட்டது. பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, மேலதிக செயலாளர்களான சமிந்த குலரத்ன, ஹர்ஷ விஜேவர்தன, பொதுமக்கள்தொடர்பாடல் பிரிவுக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் நிசாந்த வீரசிங்க, அரச அதிகாரிகள், பொதுமக்கள் தொடர்பாடல்பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்குத் திடீர் பயணம்

## கூட்டமைப்பையும் சந்திப்பார்



**கொழும்பு, ஜன.05**

**இந்திய வெளிவிவகார அமைச்சர் சு.ஜெய்சங்கர் திடீர் விஜயமாக இலங்கை வருகிறார்.**

**இந்த வார இறுதிக்குள்- அடுத்த சில நாள்களுக்குள் அவர் இலங்கை விஜயம் செய்வார் எனத் தெரிய வருகிறது.**

இலங்கையில் சீனத்தலையீடுகள் அதிகரித்து வரும் நிலையில் அண்மையில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இந்த நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் அடுத்த சில நாட்களில் இலங்கை வருகிறார்.

இந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தரப்புக்களை இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்திப்பார்.





# வவுனியா ஆசிக்குளத்தில் யானைகள் அட்டகாசம்

## குடலைப் பருவ நெல் வயல்கள் நாசம்

வவுனியா, ஜன. 05

வவுனியா, ஆசிக்குளம் பகுதியில் உள்ள நெல் வயல்களுக்குள் காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் செய்ததால் பயிர் நிலங்கள் அழிவடைந்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஆசிக்குளம் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள விவசாய நிலங்களுக்குள் இரவு வேளை கூட்டமாக புகுந்த 20 வரையிலான காட்டு யானைகள் குடலைப் பருவத்தில் இருந்த நெல்களை உண்டும், அதனை அழித்தும் நாசம் செய்துவிட்டு அதிகாலை அங்கிருந்து வெளியேறிச் சென்றுள்ளன.

இதன் காரணமாக ஆசிக்குளம், இலுப்பைக்குளத்தின் கீழ் உள்ள 5 ஏக்கர் நெல் வயல்கள் அழிவடைந்துள்ளன. வங்கிகளில் கடன் பெற்று விவசாயம் செய்த நிலையில் காட்டு யானைகள் நெல் வயல்களை அழித்தமையால் கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால், தமக்கு பாதுகாப்பான யானை வேலி அமைத்து தருவதுடன், தமது விவசாய அழிவுக்கான இழப்பீடுகளையும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரியுள்ளனர்.

# படைப்புழுக்களைக் கட்டுப்படுத்தும் பணிகளும் கொரோனாவால் பாதிப்பு

கொழும்பு, ஜன. 05

கொரோனா வைரஸ் பரவலானது, படைப்புழுக்களை கட்டுப்படுத்தும் பணிகளிலும் தாக்கம் செலுத்தியுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக விவசாயத்துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்க முடியாத நிலையில் உள்ளனர்.

சோளம் உள்ளிட்ட பல்வேறு பயிர்ச்செய்கைகளில் படைப்புழுக்கள் தற்போது தாக்கம் செலுத்தியுள்ளது. இதன் காரணமாக தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பட்டாணிச்சூருக்கு பயண கட்டுப்பாடு

வவுனியா, ஜன. 05

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் கொரனா தொற்றாளர்கள் இருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அந்தப் பகுதி முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

முதலாம் ஒழுங்கையில் இருந்து 5 ஆம் ஒழுங்கை வரை அனைத்து பகுதிகளும் முடக்கப்பட்டுள்ளதுடன் எவரும் வெளியேற அனுமதிக்கப்படாத நிலையில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள பல வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுபவர்கள் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் இந்தப் பகுதியிலேயே வசித்து வருகின்றனர்.

அந்தப் பகுதியில் இருந்து வந்து வர்த்தகத்தில் ஈடுபடுவர்களை வர்த்தக நிலையங்களை மூடுமாறு சுகாதாரப் பகுதியினரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# மேலும் 97 சுற்றுலா பயணிகள் நேற்று நாட்டை வந்தடைந்தனர்

கொழும்பு, ஜன. 05

உக்ரைனைச் சேர்ந்த மேலும் 97 சுற்றுலாப் பயணிகள் மத்தளை விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக அவர்கள் நாட்டுக்குள் அழைத்துவரப்பட்டனர் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 180 சுற்றுலாப்பயணிகளுடன் இலங்கைக்கான முதல் உக்ரேனிய பயணிகள் விமானம் டிசெம்பர் 28ஆம் திகதி மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியிருந்தது.

அவர்களில் இதுவரை 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயாளிகள் அனைவரும் அவர்கள் தங்கியுள்ள ஹோட்டலில் அமைக்கப்பட்டுள்ள சிகிச்சை மையங்களில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் என சுகாதார அமைச்சின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# அறத்தின் பாற்பட்டே மயூரனை ஆதரித்தோம்

## ஐங்கரநேசன் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.5

நல்லூர் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பங்காளிக் கட்சியான ரெலோவின் உறுப்பினர் கு. மதுசுதன் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தார். ஆனால், தவிசாளர் தா. தியாகமூர்த்தி தங்களின் பங்காளிக் கட்சியான தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்த போதும் அவரை வீழ்த்தித் தான் தவிசாளராக வேண்டும் என்ற நோக்கில் இவர் இரண்டு தடவையும் பாதீடைத் தோற்கடிப்பதற்குத் தீவிரமாக அவர் செயல்பட்டிருந்தார்.

பாதீடைத் தோற்கடித்து தனக்கு ஆதரவு வழங்குமாறு கேட்ட அவர் பாதீடின்போது அதற்கு ஆதரவாகவே வாக்களித்திருந்தார். இதனாலேயே, அரசியல் அறத்தின் பாற்பாட்டு இவருக்கு எம்மால் வாக்களிக்க முடியாமல் போனது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில்,

ஜனநாயக ரீதியாக பதவி ஒன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டவரை அவர் எந்தக் கட்சியைச்சேர்ந்தவராயினும் வலுவான காரணங்கள் எதுவும் இல்லாமல் அரசியல் காழ்ப்பின் காரணமாகக் கவிழ்க்கக்கூடாது என்பது உறுதியான நிலைப்பாடு.

மதுசுதனை ஆதரிக்குமாறு எம்மிடம் கோரப்பட்டது. ஆனால், நாம் பொருத்தமான வேட்பாளரை நிறுத்தினால் ஆதரவளிப்போம் எனக் கூறினோம். ஆனால், கூட்டமைப்பு அவரை மாற்றவேயில்லை.

எனவே, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரான ப. மயூரனுக்கு அறத்தின் பாற்பட்டு எமது உறுப்பினர்கள் வாக்களித்தனர் - என்றுள்ளது.

# மரண அறிவித்தல்

பிறப்பு
05 - 11 - 1929



இறப்பு
31 - 12 - 2020

## குமாரசாமி பரராசசிங்கம் (செல்வம்)

**வட-கிழக்கு மாகாணங்களுக்கான ஓய்வுபெற்ற வேலைப் பரிசோதகர்** (inspector of works)

**நெடுந்தீவு (பிறந்த இடம்) உடுவில்,** Scarborough - Canada

யாழ். நெடுந்தீவு மத்தி காரைவளவைப் பிறப்பிடமாகவும், உடுவில், கனடா Scarbrough ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி பரராசசிங்கம் அவர்கள் 31-12-2020 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற குமாரசாமி -நாகமுத்து இணையரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம்- இராசம்மா இணையரின் மூத்த மருமகனும், வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வள்ளியம்மைப்பிள்ளை (இரத்தினாம்பிகை- கனடா, ஓய்வுபெற்ற ஆசிரியை- உடுவில் மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், குலராசசிங்கம்(கோகுலன்- கனடா), தயாநிதி (Peel District School Board Instructor- Brampton, கனடா), டிலிபராசசிங்கம் (Automobile Engineer - DRS Autos: Harrow- London, இங்கிலாந்து), அகிலராசசிங்கம் (கனடா), யமுனாநிதி (Ph.D. Medical Biochemistry - இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணநாயகம் (இலங்கை), சொர்ணம்மா(இலங்கை), புண்ணியமூர்த்தி (இலங்கை), கமலாம்பிகை (பூவதி- இங்கிலாந்து), லிங்கநாயகம் (பாலு- இலங்கை), கோபாலகிருஷ்ணன் (அன்னம்- இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனலெச்சுமி (இலங்கை), காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகம்மா, தயாவதி (இலங்கை), மற்றும் மருதையனார் (இங்கிலாந்து), மங்கையற்கரசி (இலங்கை), சகுந்தலாதேவி(தவம்- இங்கிலாந்து), காலஞ்சென்ற இரத்தினவடிவேலு, பசுபதி(செல்வம்- பிரான்ஸ்), கமலாம்பிகை (இராசாத்தி- இலங்கை), நித்தியானந்தன்(இராசன்- கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தி(கனடா), இரவீந்திரன்(கனடா), சுகன்யா(இங்கிலாந்து), சீவமதி (RECE, YMCA - கனடா), செல்வகுமரன் (M.Sc. Civil Engineering - இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷாணு, சஙணுகா, தமிழருவி, ஈழமகள், புலிமகள், சோபினி (Hons.B.Sc. Physiology- University of Toronto, St. George, M.A.Sc Biomedical Engineering student, McMaster University), Muzp(B.Eng. Biomaterials Engineering student,McMaster University, மகிரன், வருணிகா, கௌதமன்(Hons.B.A. English Literature. York University, M.Ed. student- University of Toronto, St. George - OISE), சஞ்சீவன்(M.D. student. All Saints University School of Medicine), நிவாஷினி, வர்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவர்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

ஈழநாடு



# அரிவாளுடன் கருணாவை சந்திக்க சென்றவர் கைது!

## கிளிநொச்சி பொலிஸார் தீவிர விசாரணை

**கிளிநொச்சி, ஜன.05**

**கூரிய ஆயுதத்துடன் கருணா அம்மானை சந்திக்கச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.**

நேற்று முன்தினம் முரசுமோட்டைப் பகுதியில் தங்கியிருந்த கருணா அம்மானைச் சந்திக்க சென்ற நபரை கடமையில் நின்ற பொலிஸார் சோதனைக்குட்படுத்தினர். இதன்போது அவரிடமிருந்து கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் கூறினர்.

கத்தி மற்றும் அரிவாள் ஆகியவற்றை வயலுக்கு பசளை இடுவதற்காக எடுத்து சென்றார் எனவும், வீடு திரும்பும்புகையில் கருணா அம்மானைச் சந்திக்கச் சென்றார் எனவும் சந்தேக நபர் குறிப்பிட்டுள்ளார்.



சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

# மாகாணத் தேர்தல் குறித்து ஆராய நிபுணத்துவக் குழு

## நிமல் லான்சா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 05

நாட்டின் அபிவிருத்தி மற்றும் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு ஆகியவற்றை மாகாண சபை ஊடாக பெற முடியும். மாகாண சபை தேர்தல் குறித்து ஆராய நிபுணத்துவ குழுவை நியமிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கிராம வீதி மற்றும் அடிப்படை வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.



அத்தனகல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில், மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

மாகாண சபை திருத்தம் கொண்டு வரப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள நிலையில், மாகாண சபைத் தேர்தலும் பிற்போடப்பட்டுள்ளது.

எனவே தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

மக்களின் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபையை நிர்வகிக்க முடியாது. மக்களின் பிரச்னைகள் மக்கள் பிரதிநிதிகளிடமே தெரிவிக்கப்படுகின்றன.

மக்கள் பிரதிநிதிகள் இன்றி அதிகாரிகளால் மாத்திரம் அனைத்தையும் செய்ய முடியாது.

அதிகாரிகள்மக்களுடன்இணைவது குறைவு. மக்கள் பிரதிநிதிகள் தான் மக்களுடன் எப்போதும் தொடர்பிலிருப்பர். எனவே தான் மாகாண சபைத் தேர்தல் நாட்டுக்கு அவசியம்.

பாராளுமன்றம் கூடும்போது, மாகாண சபைத் தேர்தல் முறை, திருத்தம், தேர்தல் முறையில் உள்ள குறைபாடு குறித்து கலந்துரையாடி, இது தொடர்பாகக் குழுவொன்று நியமித்து மிக விரைவில் தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது-என்றார்.

# புதிய அரசமைப்பு வரைவு இவ்வருடம் பாராளுமன்றில்?

கொழும்பு, ஜன. 05

புதிய அரசமைப்பு தொடர்பான சட்ட வரைவை இந்த வருடம் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

புதிய அரசமைப்புக்கான யோசனைகள் அடங்கிய வரைவு நகலை முன்வைப்பதற்காக அரசு நிபுணர்கள் குழுவொன்றை அமைத்திருந்தது. மேற்படி குழு பொதுமக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரிடமும் மின்னஞ்சல் மற்றும் தபால் மூலம் கருத்துக்களைக் கோரியிருந்தது. பல தரப்பினரும் யோசனைகளை முன்வைத்திருந்தனர்.

இந்தக் குழுவின் யோசனைகள் அடங்கிய வரைவு நகல் எதிர்வரும் மார்ச் மாதம் அரசிடம் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு, அமைச்சரவை அனுமதி உட்பட சட்டபூர்வமான ஏற்பாடுகள் பூர்த்தியான பின்னர் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். தனது பதவிக்காலத்தில் இரண்டாவது ஆண்டு முடிவடைவதற்குள் புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி இந்த வருடத்துக்குள் புதிய அரசமைப்பு இயற்றப்படும் எனவும் அறியமுடிகின்றது. சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாத வகையில் புதிய அரசமைப்பை இயற்றுவதே அரசின் திட்டமாக இருக்கின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரயில் சேவை எண்ணிக்கை நேற்று முதல் அதிகரித்தது

கொழும்பு, ஜன. 05

நாட்டில் சேவையில் ஈடுபடும் அனைத்து ரயில்களின் எண்ணிக்கை நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி 74 ரயில் சேவைகள் கரையோரப் பாதையிலும், 64 ரயில் சேவைகள் பிரதான பாதையிலும், 26 ரயில் சேவைகள் புத்தளம் பாதையிலும், 12 ரயில் சேவைகள் களனி பள்ளத்தாக்கு வழியிலும், நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ரயில் பயணங்கள் அட்டவணையில் சேர்க்கப்பட்டிருந்தாலும், நீண்ட தூர ரயில் பயணங்கள் இன்னும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

# சூதாட்ட விடுதி சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜன. 05

வனாத்தவில்லு, மயிலன்குளம் பிரதேசத்தில் வீடொன்றில் இரகசியமான முறையில் நடாத்திச்செல்லப்பட்ட சூதாட்ட விடுதியொன்று நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த 07 பேர் வனாத்தவில்லு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு பணமும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

# 5000 வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஜன. 05

சௌபாக்கிய தொலைநோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 5 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தின் முதல் கட்டம் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

இந்த வீட்டுத்திட்டத்தின் முதற்கட்டமாக 3 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் நேற்று ஊறுகொடவத்தை பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாநகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மாநகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனைக்கமைய இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

முதல் கட்டத்தின் கீழ் இந்த வீட்டுத்திட்டம் கொழும்பு மாவட்டத்தின் ஊறுகொடவத்தை, புளுமென்டல், மாலம்பே, மாகும்புர, பொரலஸ்கமுவ ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன.

# சுகாதார விதிகளை மீறிய 23 பேர் கைது!

கொழும்பு, ஜன. 05



முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை முடிந்த 24 மணி நேரத்தில் மேலும் 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் 2, 098 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.




# 7,500 கிலோ மஞ்சள் தூள் மீட்பு

கொழும்பு, ஜன. 05

சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 15 இலட்சம் ரூபா பெருமதியுடைய 7500 கிலா கிராம் மஞ்சள் தூள் சுங்க திணைக்களத்தின் இடர் மேலாண்மை பிரிவினால் கடந்த டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த மஞ்சள் தொகை 19 350 கிலோ கிராம் கோதுமை மா எனக் கூறப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

எனினும் சுங்க பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது 7500 கிலோ கிராம் மஞ்சள் தூள் மற்றும் 11 850 கிலோ கிராம் கோதுமை மா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன் சுங்க பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பான ஆரம்பகட்ட சோதனை நடவடிக்கைகள் சுங்க திணைக்களத்தின் இடர்



மேலாண்மை பிரிவினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முகத்துவாரம் பிரதேசத்திலுள்ள வியாபாரியொருவரால் இவ்வாறு மஞ்சள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

# நுண்நிதிக்கடன் பிரச்னையை தீர்ப்பதற்கு அரசாங்கம் உதவும்

## செஹான் சேமசிங்க கூறுகிறார்



கொழும்பு, ஜன. 05

**பெருமளவான கிராமப்புற வறிய மக்கள் எதிர்நோக்கியுள்ள நுண்நிதிக்கடன் பிரச்னையை தீர்ப்பதற்கு அரசாங்கம் தலையிடும் என சமூர்த்தி, வீட்டுப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் வணிக மேம்பாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

இந்த நுண்நிதிக்கடனினால் பாதிக்கப்பட்டவர்களில் 93 சதவீதமானோர் பெண்களாவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் அவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் சமுர்த்தி வங்கிகளின் ஊடாக எதிர்காலத்தில் மானியங்களை வழங்க உள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.









### யாழ்.பல்கலைக்கழகத்தில்

# வகுப்புத்தடை விதிக்கப்பட்ட மாணவர்கள் போராட்டத்தில்!

யாழ்ப்பாணம், ஜன. 05

யாழ்.பல்கலைக்கழக வகுப்புத் தடை விதிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று முதல் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரர் ஆலய நுழைவாயிலில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடையை நீக்குமாறு கோரியே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற கோப்பாய் பொலிஸார் போராட்டத்தை கைவிடுமாறும், இந்த விடயத்தை உயர் அதிகரிகளின் கவனத்துக்கு தெரியப்படுத்துமாறும் மாணவர்களிடம் கேட்டுக்கொண்டனர்.

பொலிஸாரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத மாணவர்கள் தொடர்ந்து தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

# வீடொன்றில் இருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜன் 0

வாத்துவ, பொஹோத்தர முல்ல பிரதேசத்தின் வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு நபரொருவர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் 38 வயதுடைய பிள்ளையொருவரின் தாயாராவார்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

# வல்வெட்டித்துறை மீனவர் மீது இந்திய மீனவர்கள் தாக்குதல்!

## படகு இயந்திரமும் சேதமாக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 05

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மீனவர் மீது கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தியதுடன் படகு இயந்திரத்தையும் செயலிழக்கச் செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

வல்வெட்டித்துறை, ஆதி கோவிலடி பகுதியைச் சேர்ந்த அப்புலிங்கம் போதன் (வயது 49) என்ற மீனவர் தனியே தனது படகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

அவ்வேளை வத்தைப் படகில் வந்த இந்திய மீனவர்கள் போதன் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியதுடன், அவரது படகு இயந்திரத்தின் இணைப்புக்களைத் துண்டித்து அதனைத் தூக்கிச் செல்ல முயன்றிருக்கின்றர்.

அதன் பின்னர், தனியே வந்ததால் விட்டுச் சென்றிருக்கின்றோம், வேறு நபர்களும் வந்திருந்தால் கொலை செய்து கடலில் வீசியிருப்போம் என்று அவர்கள் மிரட்டி விட்டுச் சென்றிருப்பதாக பாதிக்கப்பட்ட மீனவரான போதன் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதேவேளை அவர், வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# 200 அடி பள்ளத்தில் வாகனம் விழுந்ததில் 14 பேர் காயம்!

கொழும்பு, ஜன. 05

ஹல்தும்முல்ல வால்ஹாபு தென்ன மஹா வாங்குவ பகுதியில் 200அடி பள்ளத்தில் வாகனமொன்று விழுந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு விபத்து நடந்தது. ஹப்புத்தளையில் இருந்து பலாங்கொடை நோக்கிச் சென்ற வாகனமே விபத்திற்குள்ளானது.

200 அடி செங்குத்துப் பாதையில் விழுந்ததில் 8 குழந்தைகள் உட்பட 14 பேர் காயமடைந்தனர். அவர்கள் ஹல்தம்முல்ல மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் தியத்தலாவ ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக ஹல்தம்முல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

# உக்ரைன் நாட்டவர்களின் சுற்றுலாப் பயணம் இரத்து

கொழும்பு, ஜன. 05

உக்ரைன் நாட்டில் இருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் சிகிரியா மற்றும் பொலனறுவைக்கு ஏற்பாடு செய்திருந்த பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

உக்ரைன் சுற்றுப்பயணிகள் குழு வருவதால் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் பல சுற்றுலாத் தளங்களைப் பார்வையிடத் தடை விதிக்கப்பட்ட நிலையில் மத்திய கலாசார நிதியம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இருப்பினும் உக்ரைன் நாட்டு சுற்றுலாப் பயணிகளின் பயணம் இரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்காக சிகிரியா மற்றும் பொலனறுவையில் உள்ள சுற்றுலாத் தளங்கள் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த உக்ரைன் சுற்றுப்பயணிகள் குழு தம்புள்ளை மற்றும் கண்டி ஆகிய இடங்களை பார்வையிடவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# மாளிகாவத்தை வீட்டுத் திட்டம் நேற்று தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிப்பு

கொழும்பு, ஜன. 05

மாளிகாவத்தை என்.எச்.எஸ். வீட்டுத் திட்டம் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.

கொரோனா அச்சுறுத்தலினால் கொழும்பு மாவட்டமே அதிகளவு பாதிப்புக்கு உள்ளாகி வரும் மாவட்டமாக அண்மையில் அடையாளம் காணப்பட்டது.

இந்நிலையில் கொழும்பு மாவட்டத்தின் முகத்துவாரம், கிரேண்ட்பாஸ், ஆட்டுப்பட்டித் தெரு, டேம் வீதி, வாழைத்தோட்டம், மாளிகாவத்தை, மருதானை, தெமட்டகொடை மற்றும் கொட்டாஞ்சேனை ஆகிய 09 பொலிஸ் பிரிவுகள் முடக்கப்பட்டிருந்தது.





# பாடசாலைக்குள் குளிர்பானங்களை தடை செய்ய யோசனை முன்வைப்பு

கொழும்பு, ஜன. 05


பாடசாலைக்குள் குளிர்பானங்களைத் தடை செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களை கொரோனா தொற்றுநோய் மற்றும் தொற்றுநோயற்ற நோய்களிலிருந்து பாதுகாக்கக் கல்வி அமைச்சுடன் பல சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதெனிய காலியில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றபோது இதனை தெரிவித்தார்.

பாடசாலைகளில் இயங்கும் உணவகங்கள் மற்றும் சிற்றூண்டியில் ஆரோக்கியமான உணவை மட்டுமே விற்பனை செய்ய முன்மொழியப்பட்டுள்ளதாகவும், பாடசாலைகளில் குளிர்பானங்களைத் தடை செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் அனுருத்த பாதெனிய கூறினார்.

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்: நெருக்கடியில் சிறைக்கைதிகள்



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, கைதிகள் நடத்தப்படுகின்ற முறை மற்றும் அவர்களின் நிலைமைகள் குறித்து முதன் முதலான தேசிய ஆய்வொன்றை 2018 பெப்ரவரி தொடக்கம் 2020 ஜனவரி வரை எனது தலைமை யில் நடத்தியது. அந்த ஆய்வின் அறிக்கையின் கண்டுபிடிப்புகளும் அவதானிப்புகளும் குறிப் பாக, அநுராதபுரம் விளக்கமறியல் சிறைச்சாலை யில் 2020 ஏப்ரலிலும் டிசெம்பர் முற்பகுதியில் மஹர சிறைச்சாலையிலும் கொவிட் - 19 பரவிய பின்புலத்தில் இடம்பெற்றிருக்கும் கலவரங்களின் பின்னணியில் மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன.

33 பேரை கொண்ட குழுவினால் ஏறத்தாழ இரண்டு வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின்போது சிறைச்சாலை திணைக்களத்தின் கீழ் உள்ள 20 சிறைச்சாலைகளில் சுமார் 3000 வரையான சிறைக் கைதிகளிடம் கேள்விக் கொத்தின் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டன.

மேலும், கைதிகளிடமும் சிறை அதிகாரிகளிடமும் 300 க்கும் அதிகமான நேர்காணல்கள் செய்யப்பட்டன. சிறைச்சாலைகள் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரிகளிடமும், அப்போதைய நீதி மற்றும் சிறைச்சாலைகள் சீர்திருத்தங்கள் அமைச்சர், சட்டமா அதிபர் உட்பட முக்கியமான அரசாங்க அதிகாரிகளிடமும் கூட நேர்காணல்கள் செய்யப்பட்டன.

சிறைச்சாலைகள் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் கைதிகளைக் கொண்டிருப்பதன் (அவற்றின் கொள்திறனையும் விட 107 சதவீதத்தில்) விளைவாக, சுகாதார வசதிகளும் நீர் விநியோகமும் கைதிகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு போதுமானவையாக இல்லை. இரவு நேரங்களில் கைதிகள் அவர்களுடைய சிறைக்கூடங்களுக்குள் வைத்துப் பூட்டப்படுகிறார்கள். சிறைக்கூடங்களுக்கு வெளியே தான் மலசல கூடங்கள் இருப்ப தால், அவர்கள் இரவு நேரங்களில் மலசலகூடங்களைப் பயன்படுத்த முடியாது.



**அம்பிகா சற்குணநாதன்,**
**(இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர்)**

அதன் விளைவாக கைதிகள் பிளாஸ்ரிக் பைகளை அல்லது வாளிகளை பயன்படுத்தியே தங்கள் இயற்கைக் கடன்களை கழிக்கவேண்டியிருக்கிறது. ஒரே சிறைக்கூடத்தில் தங்க வைப்பட்டுள்ள கைதிகள் ஒரே வாளியை பயன்படுத்த வேண்டியிருக்கிறது.

வெலிக்கடை சிறைச்சாலை யைத் தவிர, வேறு எந்த சிறைச்சாலை யிலும் தொலைபேசி வசதிகள் இல் லாத காரணத்தினால், கைதிகள் தங்களது உறவினர்களுட னும் சட்டத்தரணிகளுடனும் தொடர்புகளை பேண முடியவில்லை. கடிதங்கள் அல்லது நேரடி வருகைகள் மாத்திரமே வெளியுலகுடன் கைதிகள் தொடர்பு கொள்வதற்கான ஒரே வழியாக இருக்கிறது.

மோசமாக நடத்தப்படக்கூடிய ஆபத்தை இடையறாது எதிர்நோக்குகின்ற குழுவினராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் அல்லது குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகள் இருக்கிறார்கள். இவர்கள் அரசியல் சூழ்நிலை மாற்றத்தைப் பொறுத்து ஏனைய சிறை கைதிகளினாலும் சிறை அதிகாரிகளாலும் மிகவும் பாரபட்சமாக நடத்தப்படக்கூடும்.

இந்த கைதிகள் மிகவும் நீண்டகாலத்தை விக்கமறியலில் கழித்திருக்கிறார்கள். பயங்கரவாத தடைச்சட்ட கைதிகள் 11 பேர் பத்து முதல் 15 வருடங்களை விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். கைதிகள் 29 பேர் ஐந்து முதல் 10 வருடங்கள் விளக்கமறியலில் இருந்திருக்கிறார்கள் என்பதை எமது ஆய்வு கண்டறிந்திருக்கிறது.

அவர்கள் கைது செய்யப்பட்ட முறையை நோக்கும்போது, தாம் தமது வீடுகள், வேலைத்தலங்களில் இருந்து அல்லது பயணம் செய்துகொண்டிருக்கும்போது கடத்தப்பட்டதாக பலர் கூறினார்கள். கைது செய்யப்பட்டதற்கு சான்றாக ரசீது எதுவும் குடும்பத்தவர்களுக்கு வழங்கப்படவில்லை. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் பற்றிய விபரங்களும் கொடுக்கப்படவும் இல்லை.

தங்களது கைதைத் தொடர்ந்து தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்ட்டிருந்த காலகட்டத்தில் தாங்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாக பயங்கரவாத தடைச்சட்ட கைதிகள் கூறினார்கள். ஒப்புதல் வாக்குமூலங்களில் கைச்சாத்திடுவதற்கு அவர்களில் பலர் பலவந்தமாக நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களே அவர்களில் பலருக்கு எதிரான பிரதான சாட்சியமாக பயன்டுத்தப்பட்டன. ஆய்வில் உள்ளடக்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்ட ஆண் கைதிகளில் 84 சதவீதமானவர்கள், கைதுக்கு பிறகு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட் டார்கள் என்பதை ஆய்வின் மூலம் அறிந்து கொண்டோம்.

'அவர்கள் என்னை தலைகீழாக தொங்க விட்டு தாக்கினார்கள். ஒரு துணியை எனது வாய்க்குள் திணித்து எனது தலையைச் சுற்றி ஒரு பையை கட்டினார்கள். பிறகு என்னை அடித் தார்கள். எனக்கு ரத்தம் வரத்தொடங்கியது. என்னை அவர்கள் தொங்க விட்ட போது எனக்கு சுவாச நோய் இருப்ப தால் மூச்சுவிடுவதற்கு சிரமப்பட்டேன். என்னால் உகந்த முறையில் சுவாசிக்க முடியவில்லை. அவர்கள் தொடர்ந்து தாக்கினார்கள். எனது முழங்காலில் தாக்கத் தொடங்கினார்கள்' என்று ஒரு கைதி கூறினார்.

தங்களது கைதுக்கு பிறகு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் (83 சதவீதம் ஆண்கள், 100 சதவீதம் பெண்கள்) ஒப்புதல் வாக்குமூலங்களில் கைச்சாத்திட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் (90 சதவீதம் ஆண்கள், 100 சதவீதம் பெண்கள்). ஆய்வில் உள்ளடக்கப்பட்ட 95 சதவீத ஆண்களும், 100 சதவீத பெண் களும் தாங்கள் கைச்சாத்திட்ட ஆவணங்கள் தங்களுக்கு விளங்காத மொழியில் (சிங்களம்) எழுதப்பட்டிருந்ததாகவும் தங்களுக்கு அவை விளக்கிக் கூறப்படவில்லை என்றும் கூறினார்கள்.

ஒரு கைதி பின்வருமாறு அதை விளக்குகிறார். 'சிங்களத்தில் எழுதப்பட்ட சுமார் 40 -50 ஆவணங்களில் நான் கைச்சாத்திட்டிருப்பேன். சிங்கள ஆவணங்களில் கைச்சாத்திடுமாறு என்னை அவர்கள் கேட்டார்கள். ஆனால், ஒவ்வொரு தடவையும் கைச்சாத்திட நான் மறுத்தேன். குண்டாந்தடியால் தாக்கினார்கள். நான் கைச்சாத்திட்ட பிறகுதான் தாக்குதலை நிறுத்துவார்கள். இதை நான் நீதிமன்றத்தில் கூறினேன். எனக்கு சிங்களம் தெரியாது. அவர்கள் என்னை அந்த ஆவணங்களில் கைச்சாத்திட வைத்தார்கள். இது உனது கையெழுத்து தானா என்று நீதிபதி கேட்டார். நான் ஆம் என்று கூறினேன். அந்த ஆவணத்தில் மாத்திரமல்ல. வேறு பல ஆவணங்களிலும் முழுமையான சம்மதமின்றி கைச்சாத்திட்டேன் என்று கூறினேன். பலவந்தமாக எனது கையெழுத்து பெறப்பட்ட ஆவணங்களை நீதிமன்றம் ஏற்றக்கொண்டது. நீதிபதி தனது தீர்ப்பை வழங்கினார்.'

சித்திரவதையின்போது தங்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு ஒப்புதல் வாக்குமூலங்களில் தாங்கள் கைச்சாத்திடும் வரை மருத்துவச் சிகிச்சைகூட மறுக்கப்பட்டது என்று பல கைதிகள் கூறினார்கள். கைதுக்கு பிறகு சில நாட்களாக, வாரங்களாக, ஏன் சில சந்தர்ப்பங்களில் மாதக்கணக்கில் குடும்பத்தவர்களுடனும் சட்டத்தரணிகளுடனுமான தொடர்பு மறுக்கப்பட்டது. கைது செய்யப்பட்டு பல மாதங்கள் கடந்தும் கூட சில குடும்பங்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

பயங்கரவாத தடைச்சட்ட கைதிகளைப் பொறுத்தவரை, அவர்கள் உடல்ரீதியான துன்புறுத்தப்பட்டு ஒப்புதல் வாக்குமூலங்களில் கைச்சாத்திட வைக்கப்பட்டார்களா இல்லையா என்பதை தீர்மானிப்பதில் சட்டவைத்திய அதிகாரியின் வகிபாகம் முக்கியமானது. பயங்கரவாத தடைச்சட்ட கைதிகளில் 44 சதவீதமானவர்கள் சட்டவைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்கள். அவர்களில் 38 சதவீதமான ஆண்களுக்கு மாத்திரமே சித்திரவதைக்கான சிகிச்சை வழங்கப்பட்டதாக ஆணைக்குழுவிடம் கூறியிருக்கிறார்கள். பொலிஸ் அதிகாரிகளுக்கும் சட்ட மருத்துவ அதிகாரிகளுக்கும் இடையில் இரகசிய உடன்பாடு இருந்ததாகவும் அல்லது மொழிச்சிக்கல் காரணமாக பயங்கரவாத தடைச்சட்ட கைதிகளுடன் சட்ட மருத்துவ அதிகாரிகள் தொடர்பாடலை மேற்கொள்ளப்போனதாகவும் பெருந்தொகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்தன.

பயங்கரவாத தடைச்சட்ட கைதிகளில் பலர் தாங்கள் எதிர்நோக்குகின்ற நிதிப் பற்றாக்குறையை விபரித்தார்கள். குறிப்பாக, நிதி நெருக்கடி காரணமாக சட்டத்தரணிகளின் சேவையைப் பெறுவதில் சிக்கல், தம்முடைய வழக்குகளின் தன்மை காரணமாக சட்டத்தரணிகள் வழக்கை எடுத்து நடத்துவதில் காட்டும் தயக்கம், வழக்குத் தொடுக்கும் நடைமுறை நீண்டதாக இருப்பதால் நீண்டகாலத்துக்கு சட்டத்தரணியை பெறுவதில் உள்ள சிரமம் போன்றவை பற்றி அவர்கள் விளக்கிக் கூறினார்கள்.

ஒரு நபர் தமக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் ஆகக்கூடுதலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த காலம் 15 வருடங்கள் என்பதை ஆணைக்குழு அறிந்து கொண்டது. ஒரு வழக்கு விசாரணை 2002 ஆம் ஆண்டில் இருந்து, அதாவது 18 வருடங்களாக, நீடித்து வந்திருக்கிறது. அதுவே மிகவும் நீண்டகாலம் நீடித்த வழக்காகும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான தீர்ப்புகளுக்கு எதிராக 41 பேர் மேன்முறையீடு செய்திருக்கிறார்கள். அதில் ஒருவர் 2018 செப்டெம்பர் வரை 14 வருடங்களாக தீர்ப்புக்காக காத்திருந்தார். ஆணைக்குழு 13 முதல் 15 வருடங்கள் வரை விளக்கமறியலில் தடுத்து தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களையும் சந்தித்து. அவர்களில் ஒருவர் 13 வருடங்களாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டிருந்தார். அவருக்கு மூன்றாண்டு கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டவர்களில் 86 சதவீதமானவர்களும், அதே சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ஆண்களில் 76 சதவீதமானவர்களும் தமது நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதில் உள்ள ஆற்றல் பாதிக்கப்படும் அளவுக்கு மன அழுத்தம், ஏக்கம், கவலையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு மேலதிகமாக, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டவர்களில் 21 சதவீதமானவர்களும் அதே சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பவர்களில் 19 சதவீதமானவர்களும் தம்மைத் தாமே துன்புறுத்திக் கொள்ள முயற்சித்தார்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்ட ஆண்களில் 21 சதவீதமானவர்களும் அதே சட்டத்தின் கீழான விளக்கமறியல கைதிகளில் 10 சதவீதமானவர்களும் தாம் சிறையில் இருக்கும்போது தற்கொலை செய்ய முயற்சித்ததாக கூறியிருக்கிர்கள்.

தாம் விடுதலையான பின்னரும், சமூகத்தில் இணைந்து கொள்வதற்கோ, தமது வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கோ அனுமதிக்கப்படாமல் போகலாம் என்ற அச்சத்தையும், கவலையையும் பயங்கரவாத தடைச்சட்டக் கைதிகள் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

-நன்றி: பிபிசி

ஈழநாடு



# சுமந்திரன் கூறியது முழுவதுமே பொய்!

## ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானம் குறித்து தனது நிலையை விளக்குகிறார் விக்னேஸ்வரன் எம்.பி.



“ஐ. நா மனித உரிமைகள் சபை கூட்டத் தொடர் தொடர்பில் பாராளு மன்ற உறுப்பினர் சுமந்திரன் தான் தயாரித்து என்னால் நிராகரிக்கப்பட்ட வரைவுக்கு நான் தற்போது அனுமதி அளித்துள்ளதாக வவுனியாவில் செய்தியாளர்கள் மத்தியில் கூறி இருப்பதாக ஊடகங் களில் படித்தேன். சுமந்திரனின் இந்த கூற்றில் எந்த உண்மையும் இல்லை. இது அப்பட்ட மான பொய். இந்த வரைவை தான் தயாரிக்கவில்லை என்றும் வேறு யாரோ தான் தயாரித்துள்ளார்கள் என்பதை அறிந்ததும் நான் இணக்கம் தெரிவித்துள்ளதாக வேடிக்கையான கருத்துக்களை தெரிவித்துள்ளார். ”

-இப்படிக் கூறியிருக்கின்றார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான சி.வி. விக்னேஸ்வரன்.

இது குறித்து அவர் நேற்று வெளி யிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:

குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது போல இந்த கடித விவகாரம் தொடர்பில் சுமந்திரன் தெரிவித்துவரும் கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணாக அமைகின்றன. சுமந்திரன் எனது பார்வைக்காக எனக்கு அனுப்பிய கடிதத்தை தான் வரையவில்லை என்றும் புலம்பெயர் அமைப்பு ஒன்றே வரைந்ததாகவும் கூறிவருகிறார். எது உண்மை எது பொய் என்பது எனக்கு தெரியாது. ஆனால், இந்தக் கடித்தை எனக்குத் தந்தது சுமந்திரனே. எனக்கு இந்த வரைவைத் தந்த சுமந்திரன் அதனைத் தயாரித்தது வேறு யாரோ என்று எதுவும் குறிப்பிட்டதாக எனக்கு ஞாபகமில்லை. “நாங்கள்“ என்ற பதத்தைப் பாவித்ததாகவே எனக்கு நினைவு.

இந்த வரைவை படித்து பார்க்கின்ற எவருக்குமே இந்த வரைவின் நோக்கம் அரசாங்கத்துக்கு மனித உரிமைகள் சபை யில் முன்னைய தீர்மானத்தை நிறை வேற்றுவதற்கு மேலும் காலம் வழங்கு வதே என்பது புலன் ஆகும். இதில் எந்த மயக்கமும் இருக்க முடியாது.

சுமந்திரன் எனக்கு அனுப்பிய வரைவை நான் பகிரங்கப்படுத்தவில்லை. அதற்கு நான் அளித்த பதிலையே பகிரங்கப்படுத்தினேன். இவ்வாறு நான் பகிரங்கப் படுத்தியதனால் தான் அவரது கபடத்தனமான முயற்சி முறியடிக்கப்பட்டது. நான் என் பதிலைப் பகிரங்கப்படுத்தியமை காரணமாக அரசாங்கம் நாம் என்ன செய்கின்றோம் என்று விழித்துக்கொண்டுவிட்டது என்று நகைப்புக்கிடமான கருத்துக்களைக் கூறி வருகிறார். உண்மையில் சுமந்திரனின் வரைவு அரசாங்கத்தைக் காப்பாற்றும் ஒரு முயற்சி. இதில் அரசாங்கம் கோபப்பட என்ன இருக்கிறது என்று எனக்கு விளங்கவில்லை.

சுமந்திரனின் கருத்துடன் உடன்பட மறுத்து பெரும்பான்மையான புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கூட்டாக ஒரு வரைவை தயாரித்து



அனுப்பி இருந்தார்கள். அந்த வரைவில் சர்வதேச நீதிமன்றம் (நேரடியாக குறிப்பிடப்படாவிட்டாலும்), நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice), சர்வதேச சுயாதீன விசாரணை போன்ற அடிப்படையான விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இந்த வரைவுக்கு நான் இணக்கம் தெரிவித்துள் ளேனே தவிர சுமந்திரனின் வரைவுக்கு அல்ல. அதேவேளை, மனித உரிமைகள் சபை ஆணையாளர் மற்றும் சபையின் உறுப்பு நாடுகளுக்கு அனுப்பும் பொருட்டு மிகவும் இறுக்கமான ஒரு வரைவை தயாரித்து ஏனைய பாராளு மன்ற உறுப்பினர்களிடம் இணக்கம் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

இதேவேளை, வவுனியாவில் நேற்று(ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற கூட்டத்தில் சுமந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோர் மனித உரிமைகள் சபை தொடர்பிலான பொதுவான வரைவு ஒன்றைத் தயாரிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிகின்றேன். இது நல்ல விடயம். மூன்று கட்சிகளுக்கும் இடையே இது தொடர்பில் இணக்கப்பாடு ஏற்படுவதற்கு என்னால் ஆன ஒத்துழைப்பை வழங்குவேன். குறித்த வரைவு எது என்று இதுவரையில் தெரியாது.

> **சுமந்திரன் தனது திறமைகளைத் தமிழ் மக்களின் நன்மைகளுக்காக பயன்படுத்தாமல், அரசாங்கங்களின் நன்மைகளுக்காக பயன்படுத்தி வருவதே எனக்கும் அவருக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கு காரணமாகும். விரைவில் அவர் இந்த நிலைமையில் இருந்து விடுபட்டு, தனது சொந்த மக்களுக்கு நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதை புரிந்துகொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாடுபடுவதற்கு முன்வருவார் என்று நம்புகிறேன்.**

ஆனால், அடிப்படை விடயங்களில் விட்டுக்கொடுப்பதற்கு நான் தயார் இல்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன் றம், நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் ஆகியவை சாத்தியம் இல்லை போன்ற கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இவை சாத்தியமோ சாத்தியம் இல்லையோ பாதிக்கப்பட்ட சமூகம் என்ற வகையில் கிடைக்கின்ற எல்லா வழிகளையும் நாம் முயற்சிக்க வேண்டும். சரிவராதுவிட்டால் பரவாயில்லை. வெற்றி தோல்விகள் என்னைப் பொதுவாகப் பாதிப்பதில்லை. ஆனால், இவற்றுக்காக முயற்சிப்பது சர்வதேச ரீதியில் நீதிக்கான எமது போராட்டத்தை மேலும் முன்னெடுத்து செல்வதற்கு வலுவான ஒரு அடித்தளத்தை ஏற்படுத்தித் தரும் என்பது எனது நம்பிக்கை. அதேவேளை, நாம் கடும்போக்கு நிலையில் நின்றால், ஐ. நா. மனித உரிமைகள் சபையின் பிடியில் இருந்து இலங்கை விடுபட்டு போகும் என்ற அர்த்தம் அற்ற கருத்துக் களையும் நான் நிராகரிக்கின்றேன். நாம் கேட்பது எதுவுமே கடும்போக்கு அல்ல. அவை நீதியின் பாற்பட்ட நியாயமான கோரிக்கைகளே.

இறுதியாக, சுமந்திரன் பொய் கூறுவதை நிறுத்தவேண்டும் என்று அவரிடம் கோரிக்கை விடுக்கின்றேன். மூன்று நாட்களுக்கு முன்னர்தான் ரி.வியில் அவருக்கும் எனக்கும் இடை யில் தனிப்பட்ட பிரச்னை எதுவும் இல்லை என்றேன். அவருக்கு எனக்கெதி ராக ஏதேனும் பிரச்னை இருந்தால் அதைச் சொல்லட்டும். அதைவிட்டு விட்டு பொய் கூற விழையக்கூடாது.

சுமந்திரன் தனது திறமைகளைத் தமிழ் மக்களின் நன்மைகளுக்காக பயன்படுத்தாமல், அரசாங்கங்களின் நன்மைகளுக்காக பயன்படுத்தி வருவதே எனக்கும் அவருக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கு காரணமாகும். விரைவில் அவர் இந்த நிலைமையில் இருந்து விடுபட்டு, தனது சொந்த மக்களுக்கு நடைபெற்றது இனப்படு கொலைதான் என்பதை புரிந்துகொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாடுபடுவதற்கு முன்வருவார் என்று நம்புகிறேன்.

அரசாங்கம் தமிழர்களுக்கான தீர்வை புதிய அரசியல் யாப்பினுடாகத் தரும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்தும் செயற்படாமல் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பேரில் தன்னை ஆதரித்த மக்களுக்காகவும் தமிழ்த் தேசியத்துக்கா கவும் உண்மையாக உழைக்க முன்வருமாறு அவரை அன்புடன் வேண்டுகின்றேன் - என்றுள்ளது.

# தமிழ்மொழி வளர்ச்சிக்கு கலைக்கழகம் அமைத்த டில்லி

தமிழ் மொழி, கலாசாரத்தை மேம்படுத்துவதற்காக தமிழ் அக்கடமியை டில்லி அரசு அமைத்துள்ளதாக ஞாயிற்றுக் கிழமை அறிவித்துள்ளது.

இதன் தலைவராக டில்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா, துணைத் தலைவராக டில்லி மாநகராட்சி முன்னாள் கவுன்சிலர் என். ராஜா ஆகியோரை நியமித்து டில்லி அரசு வர்த்தமானி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக துணை முதல்வர் மணீஷ் சிசோடியாவின் அலுவலகம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “துணை முதல்வர் மணீஷ் சிசோடியாவின் தலைமையின் கீழ் இயங்கும் டில்லி கலை, கலாசாரம், மொழித் துறையில் தமிழ்மொழி, அதன் கலாசாரத்தை மேம்படுத்துவதற்காக தமிழ் அக்கடமி அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு டில்லி மாநகராட்சி முன் னாள் கவுன்சிலரும், டில்லி தமிழ்ச் சங்கத்தின் தற்போதைய உறுப்பினரு மான என்.ராஜாவை அக்கடமியின் துணைத் தலைவராக டில்லி அரசு நியமித்துள்ளது. டில்லி என்பது கலா சார ரீதியாக வளமான நகரமாகும். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந் தும் வந்துள்ள மக்கள் இங்கு வசித்து, பணியாற்றி வருகின்றனர். இந்தப் பன் முகத் தன்மையே டில்லியைத் துடிப் பான பரந்த நோக்கமுள்ள கலாசார நகரமாக உருவாக்குகிறது. டில்லியில் தமிழ் நாட்டிலிருந்து வந்துள்ள மக்கள் ஏராளமானோர் வசிக்கின்றனர். தமிழகத்தின் கலை, கலாசாரத்தை



டில்லியில் வாழும் அனைவரும் அறிந்து கொள்வதற்காக தமிழ் அக்கட மியை உருவாக்கி உள்ளோம்” என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாகாண சபை தேர்தல் குறித்து எந்தவித தீர்மானமும் இல்லை

## அமைச்சர் சந்திரசேன தெரிவிப்பு

அநுராதபுரம்,ஜன.05

**மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் தற்போது எந்தவித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. கொரோனா வைரஸ் தாக்கத்தால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்தவே அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என காணி விவகார அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.**



அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மாகாணசபைத்தேர்தல்தொடர்பில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை.

மாகாண சபைக்கு எதிரான போராட்டங்களை அரசாங்கத்துக்கு எதிரான போராட்டமாக மாற்றி விட வேண்டாம் என ஒரு தரப்பினர் குறிப்பிட்டுள்ள கருத்துக்களுக்கு அரசாங்கம் ஒரு போதும் அஞ்சாது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகிறது. ஆகவே அரசாங்கம் இதுவரையில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எவ்வித தீர்மானங்களை எடுக்கவில்லை.

மாகாண சபைத் தேர்தல் குறித்து முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.

பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கத்தால் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அதிக நிதி அவசியமாகும். ஆகவே நெருக்கடியான சூழ்நிலையில் தேவையற்ற செலவுகளைக் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கம் எப்போது முடிவுக்குக் கொண்டு வரப்படும் எனக் குறிப்பிட முடியாது என்ற காரணத்தால் அதிக நிதி மருத்துவத் துறைக்கும், பொது மக்கள் பாதுகாப்புப் பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது- என்றார். (எ)

## 594 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு,ஜன.05

கொரோனா வைரஸ் தொற்றால் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 594 இலங்கையர்கள் நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதிக்குள் நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி இவர்கள் இலங்கை அரசாங்கத்தின் சிறப்பு அனுமதியுடன் ஒன்பது விமானங்கள் மூலம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். (எ)

## நுவரெலியாவில் 18 பேருக்கு கொரோனா

நுவரெலியா,ஜன.05

பொகவந்தலாவ சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா இன்ஜஸ்ட்ரி தோட்டம் பீரட் பிரிவில் மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அத்தோட்டத்திலுள்ள 12 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பீரட் தோட்டத்தில் ஏற்கனவே நால்வருக்கு கொரோனா வைரஸ் பரவியதையடுத்து அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் சுய தனிமைபடுத்தப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகின. இதன்மூலமே இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் நுவரெலியாவில் 18 பேருக்கு இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ)

## ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தில் 72 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஜன.0-5

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தில் 72 ஊழியர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் மிகராபா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தில் நேற்று முன்தினம் இரு புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களைப் பற்றி அறிய நிறுவனம் தொடர்ந்து பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கிடையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் இரண்டு நோயாளிகள் நேற்று முன்தினம் சுகாதாரப் பிரிவின் கட்டுநாயக்கா சீதுவ மருத்துவ அதிகாரியால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் சீதுவாவில் ஒரு கையுறை உற்பத்தி தொழில்சாலையில் பணிபுரிபவர், மற்றையவர் கட்டுநாயக்கா, ஹீனதியன பகுதியைச் சேர்ந்த 09 வயது சிறுவன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மேலதிக சிகிச்சைக்காக வத்துபிடிவலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (எ)

## 7 மாவட்டங்களில் 3 நாள்களில் தொற்றாளர்கள் பதிவாகவில்லை

கொழும்பு,ஜன.05

7 மாவட்டங்களில் கடந்த 3 நாள்களில்எந்தவொரு கொரோனா வைரஸ் தொற்றாளர்களும் பதிவாக வில்லை என கொரோனா வைரஸ்பரவலைத்தடுக்கும் தேசிய செயல்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, பதுளை, யாழ்ப்பாணம், கேகாலை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களே இவையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, மன்னார், மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் நேற்று முன்தினம் தலா ஒருவர் என்ற அடிப்படையில் தொற்றார்கள் பதிவாகியுள்ளனர் என அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஆகக்கூடுதலான தொற்றாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். இவர்களில் 77 பேர் நீர்கொழும்பு பிரதேசத்தில் பதிவாகியுள்ளனர். அத்தோடு பல்லன்ஹேன சிறைச்சாலையில் 71 தோற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுள் 5 பெண் சிறைக்கைதிகளும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில்96 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 47 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (எ)



## 180 கிலோ போதைப்பொருள் நீர்கொழும்பு கடற்பகுதியில் மீட்பு

கொழும்பு,ஜன.05

இலங்கைக் கடற்படையினர் நீர்கொழும்பு கடற்பரப்பில் 180 கிலோகிராம்போதைப்பொருளை மீட்டுள்ளதுடன், நான்கு சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

100 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள், 80 கிலோ கிராம் ஹாஷிஷ் போதைப் பொருள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன என கடற்படை ஊடகப் பேச்சாளர் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தலுக்காகப் பயன்படுத்திய படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைதானவர் கள் சிலாபத்தைச் சேர்ந்தவர்கள்.

நேற்று முன்தினம் இரவு பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம், புலனாய்வுத் துறை மற்றும் விமானப்படை ஆகியவற்றுடன் கடற்படை நடத்திய கூட்டு நடவடிக்கையின் போது இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக நடவடிக்கைகளுக்காக கைதான சந்தேக நபர்கள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ)

## பாதுகாப்பற்ற சுற்றுலாத்துறை

### கொத்தணி உருவாக வாய்ப்பு

### ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை

கொழும்பு,ஜன.05



பாதுகாப்பற்ற முறையில் சுற்றுலாத்துறை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா சபை தயாரித்த கொள்கைக்கு முரணாக சுற்றுலாத்துறை சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயல்பாட்டினால் சுற்றுலாத்துறை கொத்தணி உருவாக வாய்ப்புள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மீளக் கட்டியெழுப்ப சுற்றுலா சபை தயாரித்த திட்டத்துக்கு முரணாகவே சுற்றுலாத்துறை சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்திய நாடுகளிலிருந்து மாத்திரமே சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்துவர சுற்றுலா சபை திட்டம் வகுத்தது.

சுற்றுலா சபை தயாரித்த திட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தியுள்ள நாடுகள் பல உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த நாடுகளின் பட்டியலில் உக்ரைன் நாடு குறிப்பிடப்படவில்லை.

உக்ரைன்நாட்டில்கொரோனா வைரஸ் தாக்கத்தால் இதுவரையில் 19 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

எந்தவொரு நாடும்கொரோனா வைரஸ் தாக்கத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிக்கவில்லை.

சுகாதாரப் பாதுகாப்பை பின்பற்றி சுற்றுலா சேவையில் ஈடுபட சுற்றுலாத்துறை சேவையாளர்கள் தயார் நிலையில் உள்ள போதும் பிற தரப்பினர் அரசியல் செல்வாக்குடன் சுற்றுலாத்துறை சேவையில் தற்போதும் ஈடுபடுகின்றனர்.

அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயல்பாட்டினால் சுற்றுலாத்துறை மூலம் கொரோனா வைரஸ் கொத்தணி தோற்றம் பெறும் அபாயம் காணப்படுகின்றது.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் சுகாதாரத் தரப்பினர் எதற்கு.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கும் செயல்பாடுகள் பொருத்தமற்றதாக உள்ளன. கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் வெளிநாட்டவர்களுக்கு சிறப்பு சலுகை வழங்கப்படுகிறது. மறுபுறம் நாட்டு மக்கள் சிறைக்கைதிகளைப் போன்று பார்க்கப்படுகின்றனர்.

உயர்வர்க்கத்தை திருப்திப்படுத்த அரசாங்கம் பல வரிச்சலுகைகளை வழங்கியது. இதன் தாக்கத்தை இவ்வருடம் எதிர்கொள்ள நேரிடும்- என்றார். (எ)



# வெள்ளக்காடாக காட்சியளிக்கும் மட்டக்களப்பின் பல கிராமங்கள்

மட்டக்களப்பு,ஜன.05

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன.**

இந்த மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாக பெய்துவரும் இடியுடன் கூடிய கடும் மழை காரண மாக தாழ் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட் பட்ட நொச்சிமுனை, நாவல்குடா, வேலூர், கூழாவடி, மாமாங்கம், குமாரபுரம், புன் னைச்சோலை, இருதயபுரம், கறுவப்பங் கேணி, பாரதி வீதி, எல்லை வீதி உட்பட பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் பலர், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை படுவான்கரையின் பல பகுதிகளில் வெள்ள அபாயம் காணப்படுகிறது.

போரதீவுப்பற்று, பட்டிப்பளை, வவுணதீவு, ஏறாவூர்ப்பற்று, கிரான் ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளி லும் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ் கும் நிலை யேற்பட்டுள்ளது. (எ)



# பட்டதாரிகளுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றம்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

மட்டக்களப்பு,ஜன.05

தேர்தல் காலத்தில் பட்டதா ரிகளுக்கு வழங்கிய வாக்குறு தியை தற்போது நாம் நிறை வேற்றியுள்ளோம் என இரா ஜாங்க அமைச்சர் எஸ்.வியா ழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.



அவர் அங்கு மேலும் தெரி வித்தவை வருமாறு:

"ஜனாதிபதி, தேர்தல் காலத் தில் சில வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். அதில் ஒரு இலட்சம் இளைஞர் - யுவதி களுக்கு வேலை வாய்ப்பு வழங் கப்படும் என்பது முக்கியமா னது. அந்த வாக்குறுதிக்கு அமைய 34ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட் டுள்ளது. இரண்டாம் கட்டத் திற்கான நேர்முகத்தேர்வு நடந்து கொண்டி ருக்கின்றது. விரை வாக ஒரு இலட்சம் நியமனங்க ளும் வழங்கி முடிக்கப்படும்.

முன்னைய அரசாங்கத்தை நாங்கள் பாதுகாத்தோம். தமிழ்த் தலைவர்கள் அவர் களுக்கு ஆதரவாக வாக்களித்து அவர்களுடன் நடனமாடினார் கள்.

ஆனால், இந்த காந்திபூங்கா முன்பாக இரவு பகலாக மழை யிலும் குளிரிலும் 188 நாள்கள் பட்ட தாரிகள் போராடிய போது அவர்களில் 20 சதவீத மானவர்களுக்கு கூட நியமனம் வழங்கப்பட வில்லை.

ஆனால் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ, 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்குவேன் என்று கூறியிருந் தார்.

இது சாத்தியமா, பொய் கூறுகின்றனர். 50ஆயிரம் பேருக்கு ஒரே தரத்தில் நிய மனம் வழங்கப் படுமா? என் றார்கள். பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ முன்னர் ஜனாதிபதியாக இருந்தபோது ஒரே நாளில் 57 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கினார்.

அதேபோன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறிய தற்கு அமைய 50 ஆயிரம் பட்ட தாரிகளுக்கு அல்ல 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட் டுள்ளது. இன்னும் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன"- என் றார். (எ)

# வாழைச்சேனையில் கிளைமோர் குண்டு மீட்பு!

வாழைச்சேனை,ஜன.05

மட்டக்களப்பு வாழைச் சேனை முல்லை நகர் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட கிளைமோர் குண்டு ஒன்றை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

இந்த வீதியில் மர்மப் பொருள் ஒன்று உள்ளது என பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸ ார் கிளைமோர் குண்டை மீட்ட னர்.

இந்த வீதியின் அருகாமையி லுள்ள வெற்றுக்காணியில் கடந்த யுத்த காலத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்துக்கான பாது காப்பு வேலி அமைக்கப்பட்டி ருந்தது. இதேவேளை இந்தக் காணியினுள் தற்போது கட்ட டம் அமைப்பதற்கான கட்டுமா னப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

வெடிபொருள் மீட்பு சம்பவம் தொடர்பில் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# காத்தான்குடி தொடர்ந்து தனிமைப்படுத்தப்படும்

## மட்டு. அரசாங்க அதிபர் தகவல்



மட்டக்களப்பு,ஜன.05

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை காத்தான்குடி பகுதி தொடர்ந்தும் தனிமைப்படுத் தப்படும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி பகுதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் அன்டிஜென் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் நோயாளி கள் அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில் இந்தத் தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை மட்டக் களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வரு மாறு:

மட்டக்களப்பு மாவட் டத்தில் அதிகரித்த மழை வீழ்ச்சி காரணமாக காத்தான் குடி பிரதேச செயலகப் பிரிவு கடுமையாகப் பாதிக்கப்பட் டுள்ளது.

மேலும் அங்குள்ள மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். அவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலை யம் மூலம் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

மட்டக்களப்பு மாவட்டத் தில் வெள்ள அனர்த்தத்தால் இதுவரையில் 13 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 387 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்- என்றார். (எ)

# கிழக்கில் சமூகங்கள் எதிர்கொண்ட பாதிப்பு பற்றிய விவரம் திரட்டல்

திருகோணமலை,ஜன.05

கிழக்கு மாகாணத்தில் கடந்த 40 வருட காலத் தில் சமூகங்கள் எதிர்கொண்ட பாதிப்புக் கள் பற்றிய விவரம் திரட்டப்பட்டு வருகின்றன என அந்த மாகாண சமூக அநீதிகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு தெரிவித்துள் ளது.

நாட்டில் ஏற்பட்ட பிரிவினை வாத நட வடிக்கை அல்லது முறை யற்ற செயல்பாடுகள் அல்லது சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கை களால் பாதிப்புக்குள்ளான தனிநபர்கள் அல்லது குழுக்களின் கவனத்தை ஈர்க்கும் பொது அறிவித்தலாக இது விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பாதிப்புக்குள்ளான தரப்பினர் தங்களது விவரங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் திருகோணமலையி லுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திலுள்ள சமூக அநீதி களை ஆராய்வதற்கான நிபுணர் கள் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் ளப்பட்டுள்ளது.

வாழ்விடம் நிலபுலன்களின் அழிவு, வாழ் வாதார இழப்பு பயிர்ச் செய்கை மேற்கொள்வதற் கான உரித்து, சொத்துக்களின் அல்லது வேறு ஏதேனும் இழப்பு நிவாரணத்தைப் பெற பாதிக்கப் பட்ட தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட நட வடிக்கைகள் போன்ற விவரங்கள் ஆவணங்களின் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# இரு குழுக்கள் மோதல்: 15 வயது சிறுவன் மரணம்

அம்பாறை,ஜன.05

அம்பாறை - அக்கரைப்பற்று பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் தாக்குதலுக்குள்ளான சிறுவன் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அட்டாளைச் சேனை பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுவனே உயிரிழந்தார்.

குடும்பத் தகராறு காரணமாக இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாறியுள்ளது.

இதன்போது தாக்குதலுக்குள்ளாகிய சிறுவன் உடனடியாக அட்டாளைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி, உயிரிழந்தார் என வைத்தியசாலையின் நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபரை கைது செய்துள்ள பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

ஈழநாடு
Online
சம்பவங்கள்,
செய்திகள்
உடனுக்குடன்
அறிந்துகொள்ள...
www.eelanadu.lk

பாகிஸ்தானில் பழமையான
# இந்துக் கோயில் இடிப்பு
## 8 அதிகாரிகள் பணி நீக்கம்

இஸ்லாமாபாத், ஜன. 05

பாகிஸ்தானில் பழமையான இந்து கோவில் இடிக்கப்பட்ட விவகாரத்தில் தங்கள் கடமையை செய்ய தவறிய 8 பொலிஸ் அதிகாரிகள் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் உள்ள கைபர் பக்துங்கவா மாகாணம் கரக் மாவட்டம் தெர்ரி என்ற கிராமத்தில் பழமையான இந்து கோவில் ஒன்று உள்ளது.

இந்த கோவிலை புதுப்பிக்க உள்ளூர் இந்துக்கள் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றனர். இதை அறிந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சேர்ந்த கும்பல் கடந்த சனிக்கிழமை கோவிலை இடித்து தீ வைத்து கொளுத்தியது. இதில் கோவில் முற்றாக சேதமடைந்தது.

இந்த சம்பவத்துக்கு பாகிஸ்தானில் உள்ள சிறுபான்மை அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இந்து கோவில் இடிக்கப்பட்டது தொடர்பாக, இந்தியாவும், பாகிஸ்தானிடம் தனது கண்டனத்தை பதிவு செய்தது.

இந்த சம்பவம் தொடர்பாக சுமார் 350 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில் இதுவரை 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். எஞ்சியவர்களையும் கைது செய்ய மாகாண அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில் இந்து கோவில் இடிக்கப்பட்ட விவகாரத்தில் தங்கள் கடமையை செய்ய தவறிய 8 பொலிஸ் அதிகாரிகள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# ஜனாதிபதி ஜின்பிங் தலைமையிலான இராணுவத்திற்கு அதிக அதிகாரங்கள்
## சீனாவில் புதிய சட்டம் நடைமுறை



பீஜிங், ஜன. 05

ஜனாதிபதி ஜின்பிங் தலைமையிலான சீன இராணுவத்துக்கு கூடுதல் அதிகாரம் வழங்கும் வகையில் அந்த நாட்டின் இராணுவ சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீன ஜனாதிபதி ஜின்பிங், மா வோசேதுங்குக்கு பின்னர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வலிமைவாய்ந்த தலைவராக உள்ளார். கட்சியின் பொதுச் செயலாளராகவும் இராணுவத்தின் தலைவராகவும் உள்ளார். அவர், தற்போது வகிக்கும் பதவிகளில் வாழ்நாள் முழுவதும் தொடரமுடியும் என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில் ஜின்பிங் தலைமையிலான சீன இராணுவத்தின் அதிகாரத்தை பலப்படுத்தும் வகையில் புதிய சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. கடந்த முதலாம் திகதி இவை நடைமுறைக்கு வந்துள்ளன என்ற 'சௌத் சீனா மோர்னிங் போஸ்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய சட்டத் திருத்தத்துக்கு கடந்த 26ஆம் திகதி பாராளுமன்றம் அங்கீகாரம் அளித்துள்ளது. அமெரிக்க இராணுவத்துக்கு சமமாக சீன இராணுவத்தை 2027ஆம் ஆண்டுக்குள் அதிநவீனமாக கட்டமைக்க வேண்டும் என்று கடந்த நவம்பரில் ஆளும் கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டில் முடிவு எடுத்த நிலையில், இந்த சட்ட திருத்தங்கள் கொண்டு வந்திருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்த சட்ட திருத்தங்கள், இராணுவ கொள்கையை வகுப்பதில் முடிவு எடுக்கும் அதிகாரத்தில் பிரதமர் லீ கெகியாங் தலைமையிலான நாட்டின் மந்திரி சபையின் பங்களிப்பை பலவீனப்படுத்துகிறது. இந்த அதிகாரம், மத்திய இராணுவ ஆணையத்துக்கு செல்கிறது. இந்த ஆணையம்தான், ஜின்பிங் தலைமையிலான 20 இலட்சம் படை வீரர்களை கொண்ட சீன இராணுவத்தின் ஒட்டுமொத்த கட்டளை மையம் என்பதும், இதன் ஒரே சிவில் தலைவர் ஜின்பிங் மட்டும்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய சட்ட திருத்தங்கள், ஜின்பிங் தலைமையில் நாட்டின் இராணுவ தலைமையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை என்று இராணுவ மற்றும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (ஐ)



# நைகரில் பயங்கரவாத தாக்குதல் 100 பொதுமக்கள் உயிரிழப்பு!

நியாமி, ஜன. 05

ஆபிரிக்க நாடான நைகர் குடியரசில் இரு கிராமங்களில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 100 பேர் பலியாகினர்.

நைகரில் உள்ள டொம்பாங்கோ, ஸாரூம்தரே என்ற இரு கிராமங்களில் போகோஹராம் பயங்கரவாதிகள் நேற்றுமுன்தினம் இந்தத் தாக்குதலை நடத்தினர். இதில் பொதுமக்கள் 100 பேர் பலியாகினர். இதனைத் தொடர்ந்து பிரதமர் பிரிஜி ரபினி, அந்த இரு கிராமங்களுக்கும் பயணம் செய்தார்.

இதுகுறித்து நைகர் பிரதமர் பிரிஜி ராபினி கூறும் போது, "நான் இந்தச் சம்பவத்திற்காக வருத்தத்தைப் பதிவு செய்ய வந்தேன். ஒட்டுமொத்த தேசமும் உங்களுடன் துணை நிற்கும்" என்றார்.

நைகர் நாட்டில் கடந்த சில வருடங்களாகவே பயங்கரவாதத் தாக்குதல் அதிகரித்து வருகிறது. நைஜீரியாவை மையமாகக் கொண்டு செயல்படும் போகோ ஹராம் பயங்கரவாதிகள் நைகரிலும் அடிக்கடி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

போகோ ஹராம் தீவிரவாத அமைப்பு அல்கொய்தா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி ஏற்றல் பிரிட்டனில் நேற்று ஆரம்பம்

லண்டன், ஜன. 05

இங்கிலாந்தில், ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி முதல் முறையாக 82 வயது நபருக்கு நேற்று செலுத்தப்பட்டது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் அஸ்ட்ரா ஜெனெகா ஆகியவை இணைந்து உருவாக்கியுள்ள கொரோனா தடுப்பூசிக்கு இங்கிலாந்து அரசு கடந்த வாரம் ஒப்புதல் அளித்தது.

இங்கிலாந்தில் புதிய வகை வீரியமிக்க கொரோனா வைரஸ் பரவல் உச்சத்தில் உள்ளதால் தடுப்பூசி போடும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

ஏற்கனவே பைசர் தடுப்பூசி போடப்பட்டு வரும் நிலையில், ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி போடும் பணியும் தொடங்கியுள்ளது. பிரைன் பிங்கர் என்ற 82-வயது நீரிழிவு நோயாளிக்கு ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி முதலாவதாகப் போடப்பட்டது. (ஐ)



# சுவிஸ் புதிய ஜனாதிபதி பதவியேற்பு ஆண்டுக்கு ஓர் அதிபர் தெரிவு முறை!



பேர்ன், ஜன. 05

சுவிற்சர்லாந்து நாட்டுக்கான புதிய ஆண்டின் ஜனாதிபதியாக பொருளாதார அமைச்சர் கை பார்மலின் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். பிரெஞ்சு மொழி பேசும் சுவிஸின் மேற்குப் பிரதேசங்களில் ஒன்றான வவுட் என்னும் கன்ரன் பகுதியைச் சேர்ந்தவர் கை பார்மலின். வலதுசாரி சுவிஸ் மக்கள் கட்சியின் உறுப்பினரான அவர், கன்ரன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். சுவிஸ் கூட்டாட்சி கவுன்சில் எனப்படும் அதிகார பீடத்துக்கு 2015 இல் தெரிவானவர்.

சுவிஸின் ஜனாதிபதி தெரிவு முறை தனித்துவமானது. அங்கு ஜனாதிபதி பதவி என்பது வெறும் சம்பிரதாய பூர்வமான ஒன்று. ஜனாதிபதிக்கு என்று தனியான அதிகாரம் எதுவும் கிடையாது. உண்மையில் நாட்டை நிர்வகிக்கும் உயர் அதிகாரம் அதன் ஏழு பேர் கொண்ட சமஷ்டிக் கவுன்சிலிடமே உள்ளது. அந்த ஏழு உறுப்பினர்களுமே முக்கிய அமைச்சுப் பொறுப்புகளையும் வகிக்கின்றனர்.

சமஷ்டி கவுன்சிலில் இடம்பெறும் அமைச்சுப் பொறுப்புள்ள அந்த ஏழு பேரில் இருந்து வருடாந்தம் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுகிறார். மத்திய சமஷ்டி பாராளுமன்றத்தில் கட்சிகளுக்கு உள்ள செல்வாக்கைப் பொறுத்து ஒருவர் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவாகவும் வாய்ப்புள்ளது.

கடந்த ஆண்டில் அதிபராக விளங்கிய சிமோனெட்டா சோமருகா 2015 இலும் அதிபராகப் பதவி வகித்தவர்.

சமஷ்டி பாராளுமன்றத்தின் வாக்கெடுப்பில் செல்லுபடியான 202 வாக்குகளில் 188 வாக்குகளைப் பெற்று கை பார்மலின் புதிய ஆண்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். துணை ஜனாதிபதியாக தற்போதைய வெளிவிவகார அமைச்சர் லாங்சியோ கஸிஸ் தெரிவானார். இவர் அடுத்த 2022 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவாகக் கூடிய வாய்ப்பைப் பெறுகிறார்.

61 வயதான புதிய அதிபர் கை பார்மலின் பொருளாதார அமைச்சராகப் பதவி வகித்த சமயம் அவரது அரைகுறை ஆங்கிலம் கடும் விமர்சனங்களைச் சந்தித்ததுண்டு.

நேர்காணல் ஒன்றின் போது அவரது ஆங்கில உரையாடல் திறனை 'நியூயோர்க் ரைம்ஸ்' விமர்சித்திருந்தது குறிப்பிடத் தக்கது. ஆங்கிலம் பேச முடியாத ஒருவர் ஜனாதிபதியாக இருப்பது நாட்டின் வெளி விவகாரங்களைக் கையாள்வதில் குறைபாடுகளை ஏற்படுத்தலாம் என்றும் விமர்சனம் உள்ளது. ஆயினும் சுவிஸ் தலைவர்களைப் பொறுத்தவரை அவர்களது இந்த ஆங்கில மொழி அறிவு இன்மை புதிதான ஒன்றல்ல. (ஐ)

# கனடாவின் சனத்தொகை வளர்ச்சி: 2020 பிற்பகுதியில் பெரும் வீழ்ச்சி

ரொறாண்டோ, ஜன. 05

கனடாவின் சனத் தொகை வளர்ச்சி வீதம் 2020 ஜூலை 1 முதல் 2020 செப்ரெம்பர் 30 வரையான மூன்றாம் காலாண்டில் மிகக் குறைந்தளவில் பதிவாகியுள்ளது.

2020 மூன்றாம் காலாண்டில் நாட்டில் சனத்தொகைப் பெருக்கம் வெறும் 2,767 பேர் என்ற அளவிலேயே அதிகரித்துள்ளது. 1946 ஆம் ஆண்டின் பின்னர் பதிவான மிகக் குறைந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் இதுவாகும் என கனடா புள்ளிவிவர துறை வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதில் மிக முக்கிய காரணியான குடியேற்றவாசிகளின் வரவு குறைந்தமை அமைந்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கனடாவின் மக்கள் தொகை குடியேற்றவாசிகள் மூலம் 70 ஆயிரத்தால் அதிகரித்தது.

கனடாவின் பயணக் கட்டுப்பாடுகள் மார்ச் 2020 வரை நடைமுறைக்கு வரவில்லை என்பதே இதற்குக் காரணமாகும். கனடாவின் மக்கள் தொகை வளர்ச்சியைக் குறைப்பதில் தொற்று நோயின் பின்னரான பயணக் கட்டுப்பாடுகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய கனடா குடியேற்றவாசிகளையே பெரிதும் நம்பியுள்ளது. எனினும், தொற்று நோயின் பின்னர் குடியேற்றத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதால் நாட்டில் பெரும் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையுடனான டெஸ்ட்: தென்னாபிரிக்கா முன்னிலை

ஜொகன்னஸ்பேர்க், ஜன. 05

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 145 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது தென்னாபிரிக்கா அணி.

இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்கு சென்று இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதல் டெஸ்ட் போட்டியை இனிங்ஸ் மற்றும் 45 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி கொண்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரண்டாவது டெஸ்ட் போட்டி தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 40.3 ஓவர்களை சந்தித்து 157 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும்இழந்தது. குஷல் பெரேரா 60, டி சில்வா 29, துஷ்மந்த சாமிர 22, லஹிரு திரிமன்னே 17 ஆகியோர் அதிக ஓட்டங்களைப் பெற்றனர். ஏனையோர் ஓரிலக்க ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்தனர்.

தென்னாபிரிக்காவின் பந்து வீச்சில் நோர்ட்ஜே 6, முல்தர் 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

முதல் இனிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்காவுக்கு டீன் எல்கர், எய்டன் மார்க்ரம் தொடக்கம் கொடுத்தனர்.

எய்டன் மார்க்ரம் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆனால், அடுத்து வந்த வான் டெர் டுசென் எல்கருடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.



எல்கர் அபாரமாக அரைச்சதம் கடந்து 92 ஓட்டங்களையும், டுசென் 40 ஓட்டங்களையும் எடுத்து - தென்னாபிரிக்கா ஒரு விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்களை பெற்ற வேளை முதல்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து ஆடியது தென்னாபிரிக்கா, எல்கர் 13ஆவது சதத்தைப் பூர்த்தி செய்ய, டுசென் தனது 4ஆவது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். தொடர்ந்த ஆட்டத்தில், எல்கர் 127 ஓட்டங்களுடன் சாமிரவின் பந்தில் திரிமன்னேயிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து டுசென் 67 ஓட்டங்களுடன் வீழ்ந்தார்.

பின்னர் வந்த தென்னாபிரிக்க வீரர்கள் அதிகம் தாக்குப்பிடிக்கவில்லை. டூ பிளசிஸ் 8, அணித் தலைவர் கொக் 10, ரெம்பே பவுமா 19, வியான் முல்தர் 7, கேஷவ் மஹாராஜ் 2, அன்ரிச் நோர்ட்ஜே 13 ஓட்டங்களை எடுத்தனர்.

10ஆவது விக்கெட்டுக்காக சேர்ந்த லுதோ சிபாம்லாவும் லுங்கி நிகிடியும் நிலைத்து ஆடினர். ஆனாலும் நிகிடி 14 ஓட்டங்களை எடுத்த நிலையில் வீழ்ந்தார். இறுதியில் சகல விக்கெட்களையும் இழந்து 302 ஓட்டங்களை தென் னாபிரிக்க அணி பெற்றது. இதனால் 145 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

இலங்கையின் பந்து வீச்சில் விஸ்வ பெர்னாண்டோ 4 விக்கெட்களையும், அசித பெர்னாண்டோ, தசுன் சானக ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இலங்கை அணி தனது இரண்டாவது இனிங்ஸை தொடங்கியுள்ளது. இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாளாகும்.



# வில்லியம்ஸன் மீண்டும் சதம்

கிறிஸ்ட்சேர்ச், ஜன. 05

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இரண்டாம்நாளான நேற்று ஆட்டம் முடியும்போது நியூஸிலாந்து அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 286 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நியூஸிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் தற்போது விளையாடி வருகின்றது.

நேற்றுமுன்தினம் கிறிஸ்ட்சேர்சில் ஆரம்பமான இந்தப் போட்டியில் முதலில் பாகிஸ்தான் அணி 297 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

அந்த அணியின் சார்பில் அசார் அலி 93, முஹமட் ரிஸ்வான் 61, பஹீம் அஷ்ரப் 48 ஓட்டங்களை அதிகமாகப் பெற்றனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில் கெய்ல் ஜமைசன் 5 விக்கெட்களையும் ரிம் சௌதி, ட்ரென்ட் போல்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இரண்டாம் நாளான நேற்று தனது முதல் இனிங்ஸை தொடங்கியது நியூஸிலாந்து அணி.

ரொம் லதாம், ரொம் புளூன்டல் இணை தொடக்கம் கொடுத்தனர். புளூன்டல் 16 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பஹீம் அஷ்ரப்பின் பந்தில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித் தலைவர் வில்லியம்ஸன் வழமைபோன்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அதேநேரம் 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த லதாம் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த றோஸ் ரெய்லர் 12 ஓட்டங்களுடன் வீழ்ந்தார்.

எனினும், நான்காவது விக்கெட்டுக்காக வில்லியம்ஸனுடன் இணைந்த ஹென்றி நிக்கொல்ஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இருவரும் அரைச்சதங்களை கடந்து ஆட்டத்தைத் தொடர்ந்தனர். வில்லியம்ஸன் 140 பந்துகளை சந்தித்து தனது 24ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது நியூஸிலாந்து அணி 85 ஓவர்களில் 286 ஓட்டங்களை சேர்த்திருந்தது.

வில்லியம்ஸன் 112 ஓட்டங்களுடனும், ஹென்றி நிக்கோல்ஸ் 89 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பாகிஸ்தானின் பந்து வீச்சில் ஷா அப்ரிடி, முஹமட் அப்பாஸ், பஹீம் அஷ்ரப் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றியுள்ளனர்.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாளாகும். (ஐ)

## இந்தியா - ஆஸி. டெஸ்ட்:

# நேரில் பார்வையிட 25வீத ரசிகர்களுக்கே அனுமதி!

சிட்னி, ஜன. 05

கொரோனா அச்சுறுத்தலால் சிட்னியில் நடைபெறவுள்ள இந்தியா - அவுஸ்திரேலியா மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கு 25 வீதமான ரசிகர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, டெஸ்ட், ஒருநாள், இருபது -20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது.

ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியாவும், இருபது -20 தொடரை 2-1 என்ற கணக்கில் இந்தியாவும் வென்றுள்ளன. இதேபோல, முடிவடைந்த இரு டெஸ்ட் போட்டிகளிலும் தலா ஒரு வெற்றியை அந்த அணிகள் பெற்றுள்ளன.

இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் போட்டி, நாளை மறுதினம் சிட்னியிலும், நான்காவது போட்டி 15ஆம் திகதி பிரிஸ்பேனிலும் தொடங்குகின்றது.

இதனிடையே கொரோனா தாக்கம் சிட்னியில் அதிகரித்துள்ளது. இதனால், அந்தப் பகுதியில் இறுக்காமான சுகாதார விதிகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

இதனால் போட்டியை பார்க்க, முன்னைய போட்டிகளுக்கு 50 வீதமான ரசிகர்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில், தற்போது 25 வீதமான ரசிகர்களுக்கே அனுமதிப்ட்டுள்ளனர்.

38,000 இருக்கைகள் கொண்ட சிட்னி மைதானத்தில் இந்தியா - ஆஸ்திரேலியா ஆகிய இரு அணிகளும் விளையாடும் 3-வது டெஸ்ட் போட்டியில் தினமும் 9,500 ரசிகர்கள் அனுமதிக்கப்படவுள்ளார்கள்.

# பிரிஸ்பேன் டெஸ்ட் திட்டமிட்டபடி நடக்கும்

## கிரிக்கெட் அவுஸ்திரேலியா அறிவிப்பு

சிட்னி, ஜன. 05

நான்காவது டெஸ்ட் போட்டியை பிரிஸ்பேனில் விளையாட இந்திய அணியினர் மறுப்பு தெரிவிக்கின்றனர் என்று வெளியான தகவல்களை கிரிக்கெட் அவுஸ்திரேலியா மறுத்துள்ளது.

CRICKET AUSTRALIA

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி தற்போது டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் தலா ஒரு வெற்றியை பெற்றுள்ள அந்த அணிகள் தற்போது, மூன்றாவது போட்டியை சிட்னியில் விளையாடவுள்ளன.

இதேபோல, நான்காவது டெஸ்ட் போட்டியை பிரிஸ்பேனில் விளையாடவுள்ளன. இந்நிலையில், கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக பிரிஸ்பேனில் விளையாட இந்திய அணி மறுத்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது சர்ச்சையாக உருவெடுத்துள்ளதை அடுத்து தற்போது கிரிக்கெட் அவுஸ்திரேலியா விளக்கம் ஒன்றை அளித்துள்ளது.

அதில், “எங்களின் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதைத் தவிர, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையிடமிருந்து எங்களுக்கு முறைப்படி வேறு எந்தத் தகவலும் வரவில்லை. அதன் அதிகாரிகளுடன் தினமும் பேசி வருகிறோம். பிரிஸ்பேனில் உள்ள விதிமுறைகள் குறித்தும் தெரிவித்து விட்டோம். அவர்கள் எமக்கு ஆதரவளிக்கிறார்கள் திட்டமிட்டபடி போட்டி நடக்கும்”, என்று அந்த விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## ருவாண்டா சிறப்பு தூதுக்குழுவினர் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு

கொழும்பு,ஜன.05

வடமத்திய மாகாணம் மற்றும் ஏனைய இடங்களில் பயிரிட்ட சோளத் தோட்டங்களில் படைப் புழுக்களின் வேகமான தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான விஞ்ஞான நிபுணத்துவத்தை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முயற்சியில் ருவாண்டாவிலிருந்து இலங்கைக்கு வந்த சிறப்பு தூதுக்குழுவினர் இராணுவத்தின் ஒருங்கிணைப்புடன் அவர்களின் இரண்டு நாள் சாத்தியக்கூறுகளை ஆராயும் பணியின் முடிவில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தலைமையகத்தில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்தவை வருமாறு: ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கோரிக்கைக்கமைய 72 மணி நேரத்துக்குள் ருவாண்டாவிலிருந்து விஞ்ஞானிகள், விவசாய வல்லுநர்கள் மற்றும் பூச்சி கட்டுப்பாடு வல்லுநர்கள் அடங்கிய தூதுக்குழு, நல்லெண்ணம் மற்றும் நடைமுறையில் உள்ள இருதரப்பு உறவுகளின் அடையாளமாக, சிறப்பு விமானம் மூலம் கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி நாட்டை வந்தடைந்தனர்.

அங்கு ருவாண்டா தூதுக்குழுவின் முன் கேள்விக்குரிய அச்சுறுத்தலின் அளவைப் பற்றிய விளக்கக்காட்சிகள் தாக்கல் செய்யப்பட்டன. இதேபோன்று ருவாண்டா வல்லுநர்கள் சோளத் தோட்டங்கள் பெருமளவில் செய்யப்படுகின்ற தங்கள் நாட்டில் பூச்சியைக் கட்டுப்படுத்துவதில் தங்கள் அனுபவங்களை முன்வைத்தனர்.

அநுராதபுரத்தில், தூதுக்குழு எலயப்பட்டுவ பகுதிக்கு ஒரு களப்பயணத்தை மேற்கொண்டதுடன், படைப் புழுக்கள் அநுராதபுர பகுதியில் மக்காச் சோள தோட்டங்களை எவ்வாறு தாக்கியுள்ளன என்பதை அவதானித்தனர். அவர்களின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் அவதானிப்புக்கள் பற்றிய ஒரு சுருக்க விளக்கத்தை இராணுவத் தளபதியின் அலுவலகத்தில் வழங்கியதுடன், கடந்த முதலாம் திகதி ருவாண்டாவுக்கு திரும்பியதும் அவர்களால் விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னர் அந்த பூச்சிகளின் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவர் என உறுதிப்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அரசியல் கைதிகளை விடுவிக்க முழுக்கவனம் செலுத்த வேண்டும்

## அரசிடம் சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை

மன்னார்,ஜன.05

**அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசாங்கம் முழுமையான கவனம் செலுத்தி அவர்கள் சிறைச்சாலைகளில் இருந்து விடுவிக்கப்பட்டு, புனர்வாழ்வு அழிக்கப்பட்டு அல்லது அவர்கள் உடனடியாக பிணையில் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.**



மன்னாரிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கோரிக்கைகளை பாராளுமன்றத்தில் முன் வைத்து வருகின்றனர்.

அவ்வாறான சூழ்நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் ஆக்கபூர்வமான செயல்பாட்டை இன்று வரை மேற்கொள்ளவில்லை என்பது தான் எனது கருத்தாகவுள்ளது.

அதேநேரத்தில் யாழ். மிருசுவில் பகுதியில் பொது மக்களைக் கொலை செய்த இராணுவச் சிப்பாய் விடுதலை செய்யப்பட்ட நிலையில் தற்போது ஆயுதங்களுடன் பிடிபட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு பௌத்த மதகுருவை தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார்.

சிறைச்சாலைகளில் கொரோனா தொற்று மிக வேகமாகப் பரவி வருகின்றது. அவர்களுடைய உயிர்களுக்கு மிகவும் ஆபத்தான சூழ்நிலை இருக்கின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் இன்னும் மௌனம் காப்பது, தமிழர்களுடைய உணர்வுகளையும் மதிக்காமல் தமிழர்களுடைய எந்த விதமான கோரிக்கைகளையும் நிறைவேற்றக்கூடாது என்கின்ற மன நிலையையே ஜனாதிபதி கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

இதேவேளை 2021 ஆம் ஆண்டு ஜெனிவா கூட்டத் தொடரை இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு பிரதானமான விடயமாக நாங்கள் பார்க்கின்றோம். கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஒரு கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அனைத்து தமிழ்த் தரப்புக்களும் இணைந்து ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை தமிழர் தரப்பாக ஒரே கோரிக்கையாக முன்வைக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இதன்போது கட்சியில் இருந்த அனைவரும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

இன்று இடம்பெறவுள்ள பாராளுமன்ற அமர்வுகளின் பிற்பாடு இவ்விடயம் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து அனைவரும் இணைந்து ஒரு செயல்பாட்டை ஒரு நிலையை ஐ.நாவுக்குத் தெரியப்படுத்துவதே எங்களுடைய கருத்தாகவுள்ளது. எனினும் நாங்கள் எங்களுடைய தனிப்பட்ட கருத்துக்களையும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

குறிப்பாக இலங்கையின் ஆலோசனைப்படி அல்லது இலங்கையின் கோரிக்கையை முன் வைத்து இலங்கை அரசாங்கத்தினுடைய செயல்பாடுகளை அவர்கள் செய்வார்கள் என்று ஒரு சிந்தனையில் ஐ.நா செயல்பாடாக இருந்தால் அவ்விடயம் தமிழ் மக்களுக்கு ஒரு ஏமாற்றமாகவே அமையும். முழுமையான சர்வதேச பொறிமுறை என்பது மிகவும் அவசியமாக இருக்கின்றது.

அவ்வாறு இருந்தால் மாத்திரம் தான் ஐ.நாவின் மூலம் தமிழர்களுக்கு ஒரு தீர்வு கிடைப்பதற்கு வாய்ப்பாக அமையும். எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் தமிழர்களுக்கு மிக முக்கியம்- என்றார். (எ)

# உரிய சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## அஜித் ரோஹண எச்சரிக்கை

கொழும்பு,ஜன.05

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற உரிய சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத நிறுவனங்கள், காரியாலயங்கள் மற்றும் சேவை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: கொழும்பில் கிராண்ட்பாஸ், தெமட்டகொடை, கொட்டாஞ்சேனை, ஆட்டுப்பட்டித்தெரு மற்றும் மாளிகாவத்தை ஆகிய பொலிஸ் பிரிவுகளும், அவிசாவளை, ருவன்வெல்ல மற்றும் காத்தான்குடி ஆகிய பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் நாடளாவிய ரீதியில் 50 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும், சில வீதி ஒழுங்குகள் மற்றும் தொடர்மாடி குடியிருப்புக்களும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் நீண்ட நாள்களாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசித்து வரும் மக்களுக்கு குறைப்பாடுகள் மற்றும் சிக்கல்கள் காணப்படலாம். எனினும் அந்தப் பகுதிகளில் இன்னமும் வைரஸ் பரவலடைவதற்கு வாய்ப்புள்ளதன் காரணமாகவே அந்தப் பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. அதனால் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்களைத் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் மற்றும் சுகாதார சட்ட விதிகளைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புதுவருடப்பிறப்பை அடுத்து நிறுவனங்கள், காரியாலயங்கள் மற்றும் சேவை நிலையங்கள் மீண்டும் வழமையைப் போன்று தமது செயல்பாடுகளை ஆரம்பித்துள்ளன. இவ்வாறு வழமைக்குத் திரும்பியுள்ள நிறுவனங்களில் சுகாதார வழிமுறைகள் முறையாக கடைப்பிடிக்கப்படுவதில்லை என்று பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அத்தகைய தொழில் நிலையங்கள் தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்தி வருகின்றனர்.

அதற்கமைய கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் கைகளை சுத்தம் செய்துகொள்வதற்கும், நிறுவனங்களுக்கு வருகைதரும் நபர்களின் விவரங்களைப் பதிவு செய்வதற்கும், உடல் வெப்ப நிலையை அளவிடுவதற்குமான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் உட்பட ஏழு சுகாதார வழிமுறைகளை இந்த தொழில் நிலையங்கள் பின்பற்ற வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத தொழில் நிலையங்கள் மற்றும் அதன் உரிமையாளர்களுக்கு எதிரான சட்டநடவடிக்கை எடுக்கப்படும். இதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டவிதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியதும் கட்டாயமாகும். இதன் போது முகக்கவசம் அணியாத மற்றும் சமூக இடைவெளியைப் பேணாத நபர்கள் தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (எ)

# தமிழ் அரசியல் கைதிகள் குறித்து நல்ல தீர்வு நிச்சயம் கிடைக்கும்

## சுரேன் ராகவன் நம்பிக்கை



கொழும்பு,ஜன.05

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையை பொறுத்தவரை நல்லதொரு தீர்வு நிச்சயம் எட்டப்படும் என்று நம்புகின்றேன் என வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: "தமிழ் அரசியல் கைதிகள் விடயம் பற்றி நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னரும் பேசியிருக்கின்றேன்.

வடக்கு மாகாண ஆளுநர் என்ற ரீதியில் அப்போது இருந்த அதிகாரிகளிடம் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் கலந்துரையாடி இருக்கின்றேன்.

மேலும், இந்த விடயத்தை முக்கியமானதாகக் கருதுமாறும், அது நல்லிணக்க நடைமுறையைப் பலப்படுத்தும் என்றும் தெளிவுபடுத்தியிருந்தேன்.

இது தொடர்பில் நாம் ஒரு நல்ல முடிவை எட்டவிருந்த நேரத்தில்தான் ஈஸ்டர் தின தாக்குதல் நடந்தது. அதன் பின் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக மீண்டும் பழைய நிலைக்கே திரும்ப வேண்டியதாயிற்று.

எனினும், ஏதாவதொரு வகையில் தீர்வு விரைவில் வரும் என்று நம்புகின்றேன்"- என்றார். (எ)

# நாட்டின் பொருளாதாரம் 3.9 வீதத்தால் வீழ்ச்சி!

**கொழும்பு, ஜன.05**

**2020 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி விகிதம் முறை 3.9 வீதத்தில் குறைவடைந்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் லக்ஷ்மனன் தெரிவித்துள்ளார்.**



கொரோனா தொற்றுப் பரவலின் தாக்கம் சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் பொருளாதாரத்தை வெகுவாக பாதித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், 2020 ஆண்டின் இரண்டாவது காலாண்டு பகுதியிலே நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமடைந்ததுடன், 3 ஆவது காலாண்டில் ஓரளவு முன்னேற்றம் காணப்படுகின்றது. அத்துடன், 2021 ஆம் ஆண்டு முழுவதும் ஒற்றை இலக்க வட்டி விகிதத்தை நடைமுறைப்படுத்த மத்திய வங்கி எதிர்பார்த்துள்ளது.

சவாலான உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் பொருளாதாரத்திற்கு போதுமான உத்வேகத்தை வழங்க நாணய மற்றும் நிதி தலையீடுகள் மூலம் தொடர்ச்சியான ஆதரவு அவசியம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# புதிய ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு இன்று

கொழும்பு, ஜன. 05



இந்த ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. இதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வுகள் இன்று முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, கடை, அலுவலக ஊழியர் திருத்தச் சட்ட மூலம் உள்ளிட்ட 4 திருத்தச் சட்ட மூலங்கள் இன்றைய தினம், விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. அத்துடன், தண்டனை சட்டக் கோவையின் திருத்தச் சட்ட மூலம் உள்ளிட்ட 3ஆம் திருத்தச் சட்ட மூலங்கள் நாளை புதன்கிழமை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மேலும், புலமைச் சொத்து திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மற்றும் விமான நிலைய வரி உள்ளிட்ட 10 கட்டளைகள் ஆகியன எதிர்வரும் 7 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, பாராளுமன்றத்தின் அனைத்து பிரிவுகளும் முழுமையாக செயல்படுவதாகவும் பாராளுமன்ற பணியாளர்களுக்கு எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் எவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படவில்லை என்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மேலும், கொவிட் 19 சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக, பாராளுமன்ற அமர்வுகளைப் பார்வையிட ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். (ஐ)




# உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு மன்னிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 05

தமக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடையை நீக்கக் கோரி உண்ணாவிரதம் இருந்த மாணவர்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா தனது அதிகாரத்துக்கு உட்பட்டு அவர்களை வகுப்புகளில் கலந்து கொள்ள அனுமதித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் 8ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் இரு பிரிவு மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டது. இது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 3 மாணவர்களுக்கு ஒரு வருடமும், 4 மாணவர்களுக்கு 6 மாதமும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், தமக்கு விதிக்கப்பட்ட வகுப்பு தடையை நீக்குமாறு கோரி மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களை போராட்டத்தை கைவிடுமாறு சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் கலாநிதி எஸ். ராஜ் உமேஸ், மாணவர் நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் எஸ். ஐங்கரன், பல்கலைக் கழக சட்ட நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் எஸ். கண்ணதாசன் மற்றும் ஒழுக்காற்று அதிகாரி பி. ஹஜந்தன் ஆகியோர் கேட்டனர்.

இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து நாட்டின் தற்போதைய நிலையையும் மாணவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு அவர்களின் தண்டனையை நீக்குவதாக அறிவித்தார். இந்த செய்தியை அவர்கள் மாணவர்களுக்கு தெரிவித்தனர்.

இதையடுத்து நேற்று மாணவர்களின் போராட்டம் முடிவுக்கு வந்தது. (ஐ)

# செய்முறை பரீட்சை இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன. 05

க.பொ.த. உயர்தர பரீட்சையின் செய்முறைப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது.

பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத மாணவர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளம் ஊடாக ஒரு பிரதியைப் பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

12 பாடங்கள் தொடர்பான செய்முறைப் பரீட்சைகள் இன்று இடம்பெறவுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார்.

# அவிசாவளை விடுவிப்பு

கொழும்பு, ஜன. 05

கொழும்பு அவிசாவளை பொலிஸ் பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பரவலை தடுப்பதற்கான தேசிய செயலணி இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

உடன் அமுலுக்கு வரும் வகையில், அவிசாவளை பொலிஸ் பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுவதாக நேற்று அறிவிக்கப்பட்டது. (ஐ)

# பருத்தித்துறை – கைதடி – யாழ். புதிய பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 05

பருத்தித்துறையில் இருந்து கைதடி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு செல்லும் புதிய பயணிகள் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 7.40 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து புறப்படும் பஸ், காலை 8.25 மணிக்கு கைதடியை அடைந்து, காலை 8.40 மணிக்கு யாழ்ப்பாணத்தை சென்றடையும்.

மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து மாலை 4.00மணிக்குப் புறப்பட்டு, 4.23 மணிக்கு கைதடியை அடைந்து பின் மாலை 5.10 மணிக்கு பருத்தித் துறையை வந்தடையும்.

வடமராட்சியிலிருந்து கைதடிக்கு வேலை நிமித்தம் மற்றும் வேறு தேவைகளுக்காக செல்வோர் இலகுவாக பயணிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# குடும்ப சுகாதார சேவை பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

சுகாதார அமைச்சில் குடும்ப சுகாதார சேவை அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2015-2016 அல்லது 2017 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் தேர்ச்சி பெற்ற திருமணமாகாத மாணவிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

01.02.2021 வரை விண்ணப்பங்கள் இணையத்தின் ஊடாக ஏற்றுக்கொள்ளப்படும் என, சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மேலதிக தகவல்களை 08.01.2021 அரச வர்த்தமானி மற்றும் www.health.gov.lk என்ற இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

*மருதனார்மடத்தில் அமைந்துள்ள*

# வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு சென்றோருக்கு தொற்று அபாயம்?

யாழ்ப்பாணம், ஜன. 05

யாழ்ப்பாணத்தில் வடமராட்சியை சேர்ந்த ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளானமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அந்த நபர் மருதனார்மடத்திலுள்ள வாகன சுகத்திகரிப்பு நிலையத்திற்கு சென்று வந்தவர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இதனால், சுத்திகரிப்பு நிலையத்திற்கு சென்று வந்தவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, மருதனார்மடத்திலுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு சென்று வந்தவர்கள் அண்மையிலுள்ள பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# 5 அரச நிறுவனங்களின் கணக்குகளை ஆய்வு செய்யக் கூடுகிறது கோப் குழு

கொழும்பு, ஜன. 05

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு இந்த மாதத்தில் ஐந்து அரச நிறுவங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை பரிசீலனை செய்யவுள்ளது என்று அதன் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களின் கணக்குகள் ஆய்வு செய்யப்படவுள்ளன.

கொவிட் 19 சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு அமைய பாதுகாப்பு முறைகளை பின்பற்றி நாளையும், 08, 19, 21 மற்றும் 22 ஆகிய நாள்களில் கோப் குழு கூடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, நாளை கோப் குழு முன்னிலையில் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் அதிகாரிகள் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். 08 ஆம் திகதி மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்தின் முதலீட்டு முகாமைத்துவம் தொடர்பான விசேட கணக்காய்வு இடம்பெறவுள்ளது.

19 ஆம் திகதி இலங்கையில் பெற்றோலியத்தை சேமித்து வைத்தல் மற்றும் விநியோகித்தல் பற்றிய கணக்காய்வு அறிக்கையும், 21 ஆம் திகதி தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பிலும், 22 ஆம் திகதி வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையின் தற்போதைய நிலைமை பற்றிய விசேட கணக்காய்வு அறிக்கையும் கோப் குழு கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன. (ஐ)

ஈழநாடு
Eelanadu

*அரசாங்கத்தின் சகல திட்டங்களையும்*

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழிலேயே பயன்படுத்த வேண்டும்

*அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவு*



**யாழ்ப்பாணம், ஜன.05**

**மத்திய அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்துத் திட்டங்களும் வடக்கு - கிழக்கில் தமிழ் மொழியிலேயே பயன்படுத்தவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவிட்டுள்ளார்.**

அத்துடன், தமிழ் பிரதேசங்களில் தமிழ் மொழியை முழுமையாக செயல்படுத்துவதில் ஏதாவது நடைமுறை சிக்கல்கள் இருப்பின் தனது கவனத்துக்கு கொண்டு வருமாறும் அவர் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கௌரவிப்பு நிகழ்வில் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் சிங்கள மொழியில் மட்டுமே வழங்கப்பட்டன. இதனால், இளைஞர்கள் அதிருப்தியையும் விசனத்தையும் வெளியிட்டனர்.

இந்நிலையில், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து நேற்றுப் பேசினார். இதன்போதே மேற்படி உத்தரவுகளை அவர் பிறப்பித்தார்.

மேலும், அரசாங்க திணைக்களங்களின் பிரதேச அதிகாரிகள் தேவையற்ற அசௌகரியங்களை தவிர்க்கும் வகையில் செயல்பட வேண்டும் என்றும் இதன்போது அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக, மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் திட்டங்கள் அனைத்திலும் தமிழ் மொழி முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அரசாங்க அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கருணா கூட்டமைப்புடன் இணைவது சாத்தியப்படாது

*சீ. வீ. கே. சிவஞானம் தெரிவிப்பு*



*யாழ்ப்பாணம், ஜன. 05*

"கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைப்பது என்பது சாத்தியப்படாத ஒரு விடயம்", இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரும், இலங்கை தமிழ் அரசின் மூத்த துணைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு வந்த கருணா, தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயல்படவுள்ளார் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் நேற்றைய தினம் செய்தியாளர்களை சந்தித்த சீ.வீ.கே. சிவஞானம், "கருணா, கூட்டமைப்புடன் இணைந்து செயல்பட விரும்புகிறேன் என்று தெரிவித்தார். ஆனால், கூட்டமைப்பு அவரை இணைத்துக் கொள்ளும் எந்த ஒரு தீர்மானமும் எடுக்கவில்லை. அவரை கூட்டமைப்புடன் இணைப்பது என்பது சாத்தியப்படாத ஒரு விடயம்", - என்றார். (ஐ)

## அத்துரலிய ரத்ன தேரர் இன்று பாராளுமன்ற உறுப்பினராகிறார்

*கொழும்பு, ஜன. 05*

வண. அத்துரலிய ரத்ன தேரர் பாராளுமன்ற உறுப்பினராக இன்று செவ்வாய்க்கிழமை பதவியேற்பார் என்று பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கா தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் எங்கள் மக்கள் சக்தி கட்சி வென்ற தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அத்துரலிய ரத்ன தேரரின் பெயரை தேசிய தேர்தல்கள் ஆணையம் அறிவித்தது.

அத்துரலிய தேரர், முதல் தடவையாக களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்டு 2004 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார். அவர் ஜாதிக ஹெல உறுமய கட்சி ஊடாக அன்று தேர்தலை சந்தித்தார்.

2010 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினரானார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றம் சென்றார். தற்போது நான்காவது தடவையாக பாராளுமன்றம் செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை உதயகுமார் (குமரன்ஸ்)

**(முல்லைத்தீவு அறிவு வைரவர் வர்த்தக நிலைய உரிமையாளரும் முல்லைப் பட்டிண முன்னைநாள் பிரபல வர்த்தகரும், வர்த்தக சங்க தலைவரும்)**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1962.12.08 | 2021.01.03 |



சில்வா வீதி, வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் P.W.D வீதி, முல்லைப்பட்டிணம், முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை உதயகுமார் (குமரன்ஸ்) நேற்றுமுன்தினம் (03.01.2021) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - ராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் திலகேஸ்வரியின் (ஆசிரியர் - மு/கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை) பாசமிகு கணவரும் வித்தியா, கோபினி (கிராமசேவகர் - செல்வபுரம்), நித்தியா (கிழக்குப் பல்கலைக்கழகம்), திவ்யா, மிதுஷன் (முல்லைத்தீவு ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஹருவரன் சாள்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் கமலேஸ்வரி (வட்டக்கச்சி), காலஞ்சென்ற பாக்கியநாதன், வசந்தாதேவி (கனடா), இரத்தினம் (செம்மலை), நாகரத்தினம் (குஞ்சு - வவுனியா), செல்வராணி (முல்லைத்தீவு), சண்முகநாதன் (கனடா), ராஜகுமார் (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (04.01.2021) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முல்லைத்தீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**P.W.D வீதி, முல்லைப்பட்டிணம், முல்லைத்தீவு.077 920 1957**

அருந்ததி
இணைய திருமண சேவை
0777 164 524 www.arunthathee.com

மணமகன் விபரம்
15574 | வே | 1980
யாழ் நகரம் | இந்து
Sen. SW Engineer|188செ.மீ
Australia | பரணி (மேடம்)

15823 | வே | 1985
சில்லாலை | இந்து
Quantity Surveyor | SL
சித்திரை (துலாம்)| 174 செ.மீ

15712 | வே | 1988
அத்தியடி | இந்து
Accountant | Australia
அச்சுவினி (மேடம்)|169 செ.மீ

15532 | கோ| 1990
மூளாய் | இந்து
Veterinary Surgeon | SL
மூலம் (தனுசு) | 180 செ.மீ

15844 | வே | 1991
குப்பிளான்| இந்து | செவ்:1
Doctor | SL | 176 செ.மீ
அத்தம் (கன்னி)

மணமகள் விபரம்
15820 | ந | 1987
யாழ் நகரம்| இந்து|செவ் :8
Accounts Execute | SL
விசாகம்(துலாம்) | 158 செ.மீ

15751 | வே | 1990
சண்டிலிப்பாய் | இந்து
Teacher | SL | 164 செ.மீ
சதயம் (கும்பம்)| செவ் : 8

15988 | வே | 1992
இளவாலை| இந்து
Doctor | இலங்கை
மூலம் (தனுசு) |160 செ.மீ

16039 | வே | 1996
கரவெட்டி | இந்து |170செ.மீ
Quantity Surveyor | SL
பூராடம் (தனுசு) | சூ-செ : 5

16102 | கோ | 1996
உடுவில் | இந்து ; SL
மிருகசீரிடம் (இடபம்)
செவ் : 4 | 154 செ.மீ

20, கே.கே.எஸ் வீதி,, கொக்குவில், யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.